Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1049)

முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 10 சனிக்கிழமை (26.11.2011) பக்கங்கள் 16 ஓசை - 56



06


தவறியது சதம்
07



பல மில்லியன் இழப்பு
08


ஆருடம் சொன்னார்
14

# தமிழ் மக்களின் பிரச்சினையை இழுத்தடிக்கிறது கூட்டமைப்பு

## ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினரிடம் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



தமிழ் மக்களுக்கான அரசியல தீர்வுப் பிரச்சினையை தொடர்ந்து இழுத்தடிப்பதிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஈடுபட்டு வருகின்றனர் என ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கன்சர்வேட்டிவ் கட்சியின் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெப்றிவோன ஒர்டன் அமைசசரின் கொழும்பிலுள்ள வாசஸ்தலத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இக்கலந்துரையாடலின்போது தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயம் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது. இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அவர்கள், இனபபிரச்சினை மற்றும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினை தொடர்பில் (15 ஆம் பக்கம் பார்க்க)

## தட்டுவன்கொட்டி கிராமத்தின் தரைவழித் தொடர்பு துண்டிப்பு

இரணைமடுக் குளத்தின் பத்து வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளதனை அடுத்து குளத்தின் கீழ் பகுதிகளில் உள்ள பெரும்பாலான பிரதேசங்கள் வெள்ளத்தில மூழ்கியுள்ள அதேவேளை ஆனையிறவு தட்டுவன்கொட்டி கிராமத்தின் தரைவழித் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் பெரும் அவலத்தில் சிக்கியுள்ளதாக தட்டுவன கொட்டி மக்கள அமைப்பு பிரதி நிதிகள் தெவித்துள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட அரச அதிபா திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அவர்களுடன் தொடர்புகொண்டு வினவியபோது தட்டுவன்கொட்டி மக்களின் போக்கு வரதத்திற்காக இன்று முதல் படகு சேவை ஒன்றினை ஆரம்பிக்க உள்ளது. இதற்காக மூன்று மாததிற்கு தேவையான உணவுப் பொருட்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது. (29)

# குடாநாட்டில் தொடரும் மழையால் தாழ்நிலப்பகுதிகளில் வெள்ள அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கன மழைகாரணமாக வெள்ளப் பாதிப்புக்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. யாழ் மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் கன மழை காரணமாக யாழ். நகரின் புற நகர்ப்பகுதி மற்றும் ஏனைய சில இடங்களில் தாழ்வான நிலங்களில் வெள்ள நீர் புகுந்து மக்களது இயல்பு வாழ்வைப் பாதித்திருப்பதாக யாழ் செயலக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ்.ரவி தெரிவித்துள்ளார். யாழ். புறநகர்ப்பகுதியான பொம்மைவெளி, நாவாந்துறை தெற்கு மற்றும் வடக்குப் பகுதிகளில் நித்திய ஒளி, சூரிய ஒளி ஆகிய கிராமங்களிலும் கரவெட்டி இரஜகிராமம் ஆகிய பகுதிகளில் (15 ஆம் பக்கம் பார்க்க)



## சோதிட ஆலோசனைப்படி அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

சோதிடர்களின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அடுத்தமாதம் 23 ஆம் திகதி அமைச்சரவையை மாற்றியமைக்கவுள்ளதாக ஆங்கில இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சனிப்பெயர்ச்சியால் அடுத்த ஆண்டின் தொடக்க மாதங்களில் ஜனாதிபதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என சோதிடர்கள் பலர் ஆலோசனை கூறியுள்ளனர்.

இதனால் அமைச்சரவையை மாற்றியமைக்குமாறும் அவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர். வரவு - செலவுத்திட்ட விவாதங்கள் முடிந்த பின்னர், (15 ஆம் பக்கம் பார்க்க)

# பொன்சேகாவை விடுவிக்குமாறு அமெரிக்கா, அரசிற்கு அழுத்தம்

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவை விடுவிககாவிட்டால், ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள பேரவையில் இலங்கைக்கு எதிரான நகர்வுகள் முன்னெடுக்கப்படும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒரு அரசியல் கைதி என்றும் அவரை உடனடியாக விடுவிக்குமாறும் அரசுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்துள்ளது.

வெள்ளைக்கொடி வழக்கு முடிந்த பின்னர், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்யும் உயர்மட்ட அமைச்சர் ஒருவருடனான சந்திப்பின் போது அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாக அதிகார வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்கா நடத்திய ஆய்வு ஒன்றில், இலங்கையைச் சேர்ந்த பெரும்பாலானோர் சரத் பொன்சேகா விடுவிக்கப்பட வேண்டும் என்று விரும்புவதாக, தெரியவந்துள்ளது என்றும், அந்த இராஜதந்திரி கூறியுள்ளார். சரத் பொன்சேகாவுக்கு இலங்கை அரசு பொதுமன்னிப்பு அளிக்கவேண்டும் என்றும் இல்லை யேல் இந்த விவகாரத்தை அமெ ரிக்கா, ஜெனிவாவில் உள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எழுப்பும் என்றும் அமெரிக்க இராஜதந்திரி எச்சரித்துள்ளார். முன்னதாக இலங்கை அமைச்சரை கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றிசியா புட்டீனஸ் (15 ஆம் பக்கம் பார்க்க)

## இரணைமடுக் குளத்தின் பத்து வான் கதவுகள் திறப்பு

கடந்த சில தினங்களாக வன்னிப் பெருநிலப் பரப்பில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் அப்பகுதிகளிலுள் குளங்களின் நீர்மட்டங்கள் சடுதியாக உயர்வடைந்துள்ளது.

இந்த நிலையில் வடமாகாணத்தின் மிகப் பெரிய குளமான இரணைமடுக் குளத்தின் பத்து வான் கதவுகள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்குத் திறந்து விடப்பட்டு நீர்வெளியேற்றப்பட்டு வருகின்றது.

எனவே குளத்தின் கீழ் பகுதி பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனைவிட கனகாம்பிகைக்குளம், வன்னேரிக்குளம், பிரமந்தனாறு குளம் ஆகிய குளங்களும் வான் பாய்கின்றன. அத்தோடு தொடர்ந்தும் பெய்துவரும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சர்வதேச நீதியாளர் குழு கோரிக்கை

சித்திரவதைச் சம்பவங்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென சர்வதேச நீதியாளர்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளது. சித்திரவதைச் சம்பவங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் விவகாரத்தில் இலங்கை அரசாங்கம் எவ்வித நெகிழ்வுத் தன்மைகளையும் கடைப்பிடிக்கக்கூடாது என சர்வதேச நீதியாளர்கள் குழு வலியுறுத்தியுள்ளது. இந்நிலையில், இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைச் சம்பவங்களை குறைப்பதற்கு அரசாங்கம் கூடுதல் கவனம் எடுத்து (15 ஆம் பக்கம் பார்க்க)

## புகலிடம் கோரிச் செல்வோரின் விதிமுறைகளில் வந்தது மாற்றம்

### அவுஸ்ரேலிய அரசு அறிவிப்பு


புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பிலான விதிமுறைகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலி யாவுக்குள் இதுவரை காலமும் படகுகள் மூலம் பிரவேசித்த புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு தனியான சட்டங்கள் நடைமுறைப படுத்தப்பட்டு வந்தன.

இந்நிலையில், அடுத்த ஆண்டு முதல் அவுஸ்ரேலியாவுக்குள் படகுகள் மூலம் பிரவேசிக்கும் புகலிடக் கோரிக்கையாளர்களும் விமானத்தில் வரும் புகலிடக் கோரிககையாளர்கள் போன்றே நடத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவுஸ்ரேலியாவுக்குள படகுகள் மூலம் பிரவேசிக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி முன்பள்ளி அபிவிருத்திக்கு இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்தகாலப் போரினால் பாதிப்புக்குள்ளான முன்பள்ளிகளை மீள் நிர்மாணிப்பதற்கும், புதிதாக முன்பள்ளிகளை நிர்மாணிப்பதற்குமாக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தனது 2011 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழான நிதியிலிருந்து ரூபா இருபது இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

மக்கள் மீள்குடியேறிய காலப்பகுதியில் சிறார்களின் ஆரம்பக்கல்வி நிலைமை கேள்விக்குறியாக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே இயங்கிவந்த முன்பள்ளிகள் அனைத்தும் முற்றாக பாதிப்புக்குள்ளாகியிருந்ததோடு அவற்றை மீள இயக்குவதில் துறை சார்ந்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வந்தனர். இதனால் இம்மாவட்டத்தில் மீண்டும் முன்பள்ளிகளை இயக்க முடியாத நிலைமையும் சிறார்களின் கல்வி மீண்டும் பின்தள்ளப்படவேண்டிய அபாயகரமான சூழலும் உருவாகியது.

இந்நிலையில், இவ் அபாயகரமான நிலையினைக் கருத்திற் கொண்ட ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித்தலைவருமான சந்திரகுமார் முன்பள்ளிகளுக்கான நிலையான கட்டமைப்பொன்றை உருவாக்கினார். அதனூடாக ஏற்கனவே இயங்கிவந்த முன்பள்ளிகளை மீள இயக்குவதற்கும் முன்பள்ளிகள் இல்லாத பகுதிகளில் புதிதாக முன்பள்ளிகளை அமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அத்தோடு அழிவடைந்த முன்பள்ளிகளை மீள் நிர்மாணம் செய்யும் திட்டத்தினையும் நடைமுறைக்கு கொண்டுவந்தார். இதற்கமைய இவரின் கடந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழும் குறித்த சில புனரமைப்பு திட்டங்களினூடாகவும் முற்றாக அழிவுக்குள்ளான பல முன்பள்ளிகள் மறுசீரமைக்கப்பட்டன.

இவ்வருடமும் கிளிநொச்சி மாவட்டத்தில் மேலும் 12 முன்பள்ளிகளை புனரமைப்பதற்காக பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழான நிதியிலிருந்து முதற்கட்டமாக ரூபா இருபத்திரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்தை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இந் நிதியிலிருந்து கரைச்சி ஜெயந்திநகர் முன்பள்ளியை நிர்மாணிப்பதற்காக 2 இலட்சம் ரூபாவும், கரைச்சி சோலைநகர் முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், கரைச்சி இரத்தினபுரம் முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், கரைச்சி செல்வாநகர் முன்பள்ளி விரிவாக்கத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், பூநகரி ஸ்ரீ முருகன் முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், பூநகரி கரடிக்குன்று முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், பூநகரி செட்டியகுறிச்சி செங்கதிர் முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், பச்சிலைப்பள்ளி சோரன்பற்று முன்பள்ளி நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், பச்சிலைப் பள்ளி வண்ணாங்கேணி முன்பள்ளி நிர்மாணத்திற்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கண்டாவளை உமையாள்புரம் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரண கொள்வனவிற்காக 50 ஆயிரம் ரூபாவும், குமரபுரம் காஞ்சிபுரம் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரண கொள்வனவிற்காக 50 ஆயிரம் ரூபாவும், கண்டாவளை உழவனூர் தம்பிராசபுரம் முன்பள்ளிக்கு கட்டடத்தை புதிதாக நிர்மாணிப்பதற்கு 2 இலட்சம் ரூபாவும், ஒதுக்கப்பட்டுள்ளது. (29)

## சின்னஞ்சிறு செய்திகள்

### விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஜே/78 கிராம சேவையாளர் பிரிவின் மக்கள் பங்கேற்புடனான கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் ஒன்றை யாழ்.மாநகர சபை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு கனகசபை கலாசார மண்டபம் அத்தியடியில் நடத்தவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பினை வழங்குமாறு அப்பிரதேச மக்களுக்கு யாழ். மாநகர முதல்வர் அழைப்பு விடுத்துள்ளார்.

### பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட சிறுவர் பரிசளிப்பு விழாவும் புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் சாதனை படைத்த வடமாகாண சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இன்று காலை 9.00 மணிக்கு யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கல்விப் பணிப்பாளர் வ.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி. ஏ.சந்திரசிறி, வடமாகாண கல்வி பண்பாட்ட அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்)

### ஊர்காவற்றுறை பகுதிகளில் ஒளி தரும் மின் விளக்குகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் அப்பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மின் விளக்குகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிகழ்வு ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தவிசாளர் ஜெயகாந்தன் தலைமையில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், நெறிஞ்சிமுனை, சூரியவத்தை ஆகிய பிரதேசங்களுக்கான மின் விநியோகம் மிக விரைவில் வழங்கப்படும் எனவும், வீதிகளின் புனரமைப்பும் வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் ஊர்காவற்றுறைப் பிரதேசசபையின் தவிசாளர் தெரிவித்தார்.

### விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட ஆலய நிர்வாகிகளுக்கான கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபையில் நடைபெறவுள்ளது.

ஆலயங்களில் இயங்கும் ஒலி பெருக்கிகளின் சத்தத்தினால் பாடசாலை மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பெரிதும் பாதிப்படைந்து வருகிறது என பிரதேச மக்களினால் பிரதேச சபைக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்தே இக்கூட்டம் நல்லூர் பிரதேசசபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

# நெடுந்தீவு படகு சேவை புதிய நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் நெடுந்தீவுப் பகுதியில் இருந்து குறிகட்டுவான் வரை சேவையில் ஈடுபடும் படகுச்சேவைகளின் நேர அட்டவணை தற்காலிகமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேசசபையின் தலைவர் கா.றெக்சியன் (ரஜீவ்) தெரிவித்துள்ளார்.

இன்று தொடக்கம் இப்பகுதிகளில் சேவையில் ஈடுபடும் படகுச்சேவை கீழ்வரும் நேரங்களில் ஆரம்பமாகவுள்ளது.

நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் ஊடாக குமுதினி படகு காலை 6.15 மணிக்கும், தனியார் படகு 7.00 மணிக்கும், குமுதினி படகு மீண்டும் 3.00 மணிக்கும் சேவையைத் தொடரும்.

இதேவேளை, குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவு நோக்கி குமுதினிப் படகு காலை 8.30 மணிக்கும், தனியார் படகு மாலை 4.00 மணிக்கும், மீண்டும் குமுதினிப் படகு மாலை 4.30 மணிக்கும் சேவையினை மேற்கொள்ளும்.

இவ்விடயம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் பல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதுடன், படகுச்சேவையினைச் சீராக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இப்பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடற்கொந்தளிப்பு மற்றும் காலநிலை மாற்றத்தினால் வடதாரகை சேவையில் ஈடுபடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொண்ட் நிறுவனம் உதவி வழங்கியது



(யாழ்ப்பாணம்)

மிதிவெடி மற்றும் வெடி பொருட்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சொண்ட் நிறுவனத்தினால் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் முரளிதரன் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதில் உடுவில் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 3 பயனாளிகளிற்கும், இந்த வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், சொண்ட் நிறுவன திட்ட இணைப்பாளர் பிரகாஷ், திட்ட முகாமையாளர் குணாளசிங்கம், யுனிசெவ் பிரதிநிதி வசந்தன் மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)

# மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் 28.11.2011 திங்கட்கிழமை, 01.12.2011 வியாழக்கிழமை, 03.12.2011 சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

29.11.2011 செவ்வாய்க்கிழமை, 02.11.2011 வெள்ளிக்கிழமை, 04.11.2011 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்,

28.11.2011 திங்கட்கிழமை, 30.11.2011 புதன்கிழமை, 04.12.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

29.11.2011 செவ்வாய்க்கிழமை 02.12.2011 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை புன்னாலைக்கட்டுவன் வடக்கு-தெற்கு, மயிலங்காடு பிரதேசத்தின் ஒரு பகுதி, ஈவினை பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும்,

30.11.2011 புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை இணுவில், மருதனார்மடம், உடுவில், சங்குவேலி, மானிப்பாய், கட்டுடை, தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, கோண்டாவில், கோம்பயன்மணல் பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபை அறிவித்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் அமெரிக்க முதலீடு வாய்ப்புக்கள ஆராய குழு வருகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமெரிக்காவின் முதலீட்டுக்கான வாய்ப்புக்கள் உள்ளதா என ஆராய்வதற்கு விசேட குழு ஒன்று அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளது. இக் குழுவின் யாழ்.விஜயத்துக்கான சகல முன்னேற்பாடுகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது.

கொழும்பு அமெரிக்க உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் உட்பட மேலும் பலர் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி யாழ்.குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு இக் குழுவினர் வரவுள்ளதாக யாழ். அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அன்றைய தினம் காலை விஜயம் செய்யும் குழுவினர் யாழ்.செயலகத்தில் முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அண்மைக்காலமாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகள், யாழ். குடாநாட்டுக்கான விஜயங்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றமை தெரிந்ததே. (பா)

# கடற்றொழில் அபிவிருத்தி வேலணையில் செயற்றிட்டம்

(தீவகம்)

தீவகம் தெற்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தின் நேற்றைய தினம் பாசிக் நிறுவனத்தினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து மீள்குடியேறிய மக்களுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்தும் திட்டத்தின் கீழ் மூன்று பயனாளிகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுதியான கண்ணாடி இழைப் படகும் வலை என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஒரு பயனாளிக்கு இயந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில், பாசிக் நிறுவனத்தின் திட்ட அலுவலர் மிக்சிக்கோ நிசிமோறி, ஈ.பி.டி.பி.யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) மற்றும் வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, கடற்றொழிலாளர் கூட்டுறவுப் பரிசோதகர் ராஜேந்திரன், வேலணை கிராம அலுவலர், சமாசத் தலைவர் ரங்கநாயகம் உட்பட கடற்றொழில் சமூகததினரும் கலந்துகொண்டனர். (85)

உண்மை, அன்பு, நேர்மை, ஆகியவற்றை ஒருவராலும் தடுத்து நிறுத்த முடியாது. நீ நேர்மை உள்ளவனாக இருக்கிறாயா? இறந்து போனாலும், சுயநலம் இல்லாதவனாக இருக்கிறாயா? அப்படியானால் மரணத்திற்கும் நீ அஞ்சவேண்டியதில்லை.

- விவேகானந்தர் -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## முதலமைச்சர் வேட்பாளர் யார்?

கூட்டமைப்புக்குள் வலுத்துள்ள உள்முரண்பாடுகள் காரணமாக மாற்றுத் தலைமை ஒன்றிற்கான ஏற்பாடுகளை ஆனந்தசங்கரி, சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் பேசி வருவதாக இவர்களுக்கு ஆதரவான இணையத்தளங்கள் எழுதுகின்றன.

வடக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதில் மாவைக்கும் சுரேஷுக்கும் இடையில் கயிறிழுப்புப் பலப்பரீட்சை உள்ளே நடைபெற்று வந்தது இப்போது வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்து விட்டது. முதலமைச்சர் பதவி என்பது சுரேஷுக்கு வரதராஜப் பெருமாள் காலத்திய கனவு. அந்நேரம் கைநழுவிப்போவதற்கு விட்ட தவறை இனியும் ஒருமுறை விட சுரேஷ் தயாரில்லை.

அதற்குரிய வியூகங்களில் ஒன்றுதான் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்துவிட வேண்டும் என்பதில் சுரேஷ் முனைப்புக் காட்டி வருவது. கட்சியின் நிர்வாகக் குழுத் தெரிவில் தனது கையை ஓங்கச் செய்துவிட முடியும் என்பது சுரேஷின் நம்பிக்கை. கட்சியாவதன் மூலம் கூட்டமைப்பிலுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகியவற்றின் ஆதரவுடன் எளிதாக முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டு விடலாம் என்று எண்ணுகிறார்.

இல்லாவிடினும், கட்சியின் தலைமைப் பதவி ஒருவருக்கு முதலமைச்சர் பதவி மற்றொருவருக்கு என்று மாவையுடன் பங்கு பிரித்துக் கொள்ள முடியும் என்று சுரேஷுக்குத் தெரியும். இந்த எதிர்பார்ப்பிலேயே, கூட்டமைப்பைப் பதிவு செய்ய மறுத்தால் தமிழரசுக் கட்சியைத் தவிர்த்துவிட்டு மாற்றுத் தலைமை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்ற மிரட்டலை சுரேஷ் விடுத்திருக்கிறார்.

இதற்கிடையில், கூட்டமைப்பிலுள்ள சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன் போன்றோர் அதிலிருந்து விலகி எற்கனவே வெளியேறியிருக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றவர்களுடன் இணைந்து மூன்றாம் நிலை பேசும் சக்தியை உருவாக்குவது ஆரோக்கியமானது என்பது தாயகத்திலுள்ள பலரின் நிலைப்பாடு என்று இவர்களுக்கு ஆதரவான பல இணையத்தளங்கள் எழுத ஆரம்பித்துவிட்டன.

தமிழரசுக் கட்சி சுமந்திரன் மூலமாக இதற்குப் பதிலடி கொடுத்திருக்கிறது. லண்டனில் அவர் ஆற்றிய ஓர் உரையில், தமிழரசுக் கட்சியைத் தவிர்த்துவிட்டு கூட்டமைப்பைப் பதிவுசெய்ய வேண்டிவரும் எனறெல்லாம் விடுக்கப்படும் மிரட்டல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் நிகழ்ச்சி நிரலே என்று தெரிவித்திருக்கிறார். அதாவது, கூட்டமைப்பை உடைத்து விடுவதற்கு சுரேஷ் குழுவினர் ஜனாதிபதியின் அனுசரணையோடு இணைந்து செயல்படுகிறார்கள் என்பதே அவரது குற்றச்சாட்டு.

மறுபுறம் வெளிநாடொன்றில் மாவை சேனாதிராசா சுரேஷின் காய நகர்த்தலுக்குக் கோபப்பட்டு நிதானமிழந்து, பதவி என்று வந்துவிட்டால தன்னாலும் எவ்வளவு தூரம் கொச்சைக்கு இறங்க முடியும் என்று காட்டிக்கொண்டிருக்கிறார். அங்கு வெளிப்படையாகப் பலர் மத்தியில் பேசும்போதே, தனது சகபாடியான சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்னாள் மண்டையன் குழுவின் தலைவர் என ஆக்ரோசத்துடன் எடுத்துரைத்திருககிறார். தன்னுடன் போட்டி என்று வந்துவிட்டால், தம்முடனிருப்பவர் தாமே விரும்பித் தங்களோடு சேர்த்துக் கொண்டவர் என்றும் பாராமல் இழிவாகப பேசுவதில் எந்தக் கூட்டமைப்புத் தலைவரும் சோடை போனவரில்லை என்பதையே நாம் அறிந்துகொள்கிறோம்.

இதற்கிடையில், கூட்டமைப்பின் பேரில் இல்லாமல் பொதுவான ஒரு பட்டியலில் வேட்பாளர்களை நிறுத்தினால் தமது கட்சி அதற்கு ஆதரவு தரும் என கஜேந்திரகுமாரின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறியுள்ளது. சுரேஷ் குழுவினர் பிரிந்து வருவதற்கான ஊக்குவிப்பாகவே இந்தத் துரும்பு இறக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் வந்தால் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதில் கூட்டமைபபுக்குள் சமரசம் ஏற்படுத்த முடியாமலேயே இருக்கும் என்று தமிழரசுக் கட்சி சார்பான கட்டுரையாளர் எழுதியுள்ளார். போகிற போக்கைப் பார்த்தால், தேர்தலுக்கு முட்டுக்கட்டையாக இருக்கப்போவது அரசோ ஜனாதிபதியோ என்பதை விட, கூட்டமைப்பினராகத்தான் இருக்கும் என்று தெரிகிறது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வரை மாகாண சபைத் தேர்தலைத் தள்ளிப்போட முடியுமானால், கூட்டமைப்பினரை விட சந்தோஷப்படப் போகிறவர்கள் வேறு யாருமில்லை.

- ஆசிரியர் -

# ஊழியர் சேமலாபநிதி பெறுகைக்கான விரலடையாளத்தை பதியும் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தொழில் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பானதும், விரைவானதுமான ஊழியர் சேமலாப நிதி பெறுகைக்கான கையடையாளத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுவருகிறது.

இச்செயற்பாட்டில் சாவகச்சேரி பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் 4 மணிவரை சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

சங்கானை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி குறிப்பிட்ட நேரத்தில் உடுவில் பிரதேச செயலகத்திலும் கிளிநொச்சி மாவட்ட ஊழியர்சேமலாபநிதி அங்கத்தவர்கள் டிசம்பர் மாதம் 10 அம் திகதிக்கு கரைச்சி பிரதேச செயலக தொழில் அலுவலகத்திலும் பதிவு செய்து கொள்ள முடியும்.

மேலும் பருத்தித்துறை நெல்லியடிப் பகுதி ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் எதிர்வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்திலும் கைவிரல் அடையாளப்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இதன் தொடர்ச்சியாக தற்போது உழியர் சேமலாபநிதி அங்கத்தவர்களின் கையடையாளத்தினையும் அவர்களின் தேசிய அடையாள அட்டைப் பிரதிமை (விம்பம்) மற்றும் புகைப்படம் எடுக்கும் செயற்பாடும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதில் 100க்கு மேல் தொழிலாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களில் நேரடியாக அவ்விடங்களுக்குச் சென்று விரலடையாளம் எடுக்கும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

அத்துடன் 100 இற்கு குறைவான பணியாளர்கள் உள்ள நிறுவனங்களாயின் ஊழியர்.சேமலாப நிதி அங்கத்தவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட நிலையங்களில் சென்று தமது விரலடையாளங்களை செலுத்தவேண்டும்.

யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் காலை 9 மணிமுதல் 4 மணி வரை விரலடையாளம் பெறும் நடவடிக்கை இடம் பெறவுள்ளது.

எனவே மேற்கூறிய இடங்களில் விரலடையாளம் வழங்கத்தவறியோர் யாழ். மாவட்ட தொழில் அலுவலகத்திற்குச் சென்று தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

இப்பதிவு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக சகல தொழில் தருநர்களும் தொழிலாளர்களுக்கு விசேட விடுமுறை வழங்கி மேற்படி செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடமாகாண தொழில் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் கெ.கனகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(உ)

## பழப் பானங்களின் தரம் ஆராய சோதனை

(கொழும்பு)

பழங்களினால் தயாரிக்கப்பட்ட பானங்கள் மற்றும் சர்பத் ஆகியவற்றின் தரங்களை கண்டறிவதற்கு சுகாதார அமைச்சு விசேட சோதனைகளை ஆரம்பித்துள்ளது. வீதிகளின் இரு மருங்குகளிலும் குளிர்பான விற்பனை நிலையங்களிலும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சர்பத் மற்றும் பழங்களினால் தயாரிக்கப்பட்ட பானங்களில் அநேகமானவை பாவனைக்கு ஒவ்வாதது என சுகாதார அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவற்றிற்காக பயன்படுத்தப்படும் நீர் மற்றும் நிறச்சேர்க்கைகள் பயன்பாட்டிற்கு பொருத்தமற்றவை என்பதால் வயிற்றோட்டம், செங்கண்மாரி போன்ற நோய்களினால் நுகர்வோர் தாக்கப்படும் அபாயம் உள்ளது. இதனால் சர்பத் மற்றும் பழச்சாறுகளை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களை திடீர் சோதனைக்குட்படுத்த சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவு சட்டமூலத்தின் பிரகாரம் தரம் வாய்ந்த பானங்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கும் தரமற்ற உற்பத்திகளில் ஈடுபடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

## குப்பை கொட்டியவர்களுக்கு 11 ஆயிரத்து 500 ரூபா தண்டம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் சட்ட விரோதமாக குப்பை கொட்டியதாகத் தெரிவிக்கப்பட்டு 6 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு யாழ். நீத வான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதை அடுத்து சந்தேக நபர்களுக்கு தலா 11500 தண்டப்பணம் விதித்து யாழ். நீதிமன்ற நீதிபதி எ.எ.ஆனந்தராசா தீர்ப்பளித்தார். (எஸ்)

# ஜயவர்த்தனபுர பல்கலையில் ஜனநாயக நிலைமை இல்லை

## - மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கமே ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபட்டு வருவதாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் ஜனநாயகம் நிலை நாட்டப்பட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் பெருமிதம் பேசிய போதிலும் தமது பல்கலைக்கழகத்தில் அவ்வாறான நிலைமை கிடையாது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேச்சாளர் பிரபாத் இந்திக்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு எதிராக சரியான குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தாது இதுவரையில் 67 மாணவர்கள் வகுப்புத் தடைக்கு உட்பட்டுள்ளனர்.

கல்வி நடவடிக்கைகளுக்காகக் கூட தற்போது மாணவர்கள் ஒன்று கூடுவதில்லை, அவ்வாறு ஒன்று கூடினால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பிரகீத் எக்னெலிகொட குறித்த தகவல் விரைவில் வெளிவரும்

## அமைச்சர் ஹெகலிய தகவல்

(கொழும்பு)

சுயாதீன ஊடகவியலாளரும் கேலிச்சித்திரக்காரருமான பிரகீத் எக்னெலிகொட வெளிநாடொன்றில் வசித்து வருகின்றார் என்ற செய்தியின் உண்மைத் தன்மை தொடர்பில் இராஜதந்திர ரீதியில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் அவர் தொடர்பான உண்மைத் தகவல் விரைவில் வெளியிடப்படும் என்று அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

எக்னெலிகொடவின் வெளிநாட்டு பயணம் தொடர்பில் முன்னாள் நீதியரசரும் அரசாங்கத்தின் ஆலோசகருமான மொஹான் பீரிஸ் தெரிவித்த கருத்துக்கு அரசாங்கம் பொறுப்புவாய்ந்த நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலையில் உள்ளதால் இது தொடர்பான விசாரணைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இதன்போது எக்னெலிகொட தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# இருபாலை பழைய தபாற் கந்தோர் வீதி 72 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்பு

(கோப்பாய்)

பொருளாதார அமைச்சின் நெல்சிப் திட்டத்தின் கீழ் கோப்பாய் தெற்கு இருபாலை பழைய தபாற் கத்தோர் வீதி 72 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரினின் (உதயன்) சிபார்சின் பேரில் இப்புனரமைப்பு வேலைகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரமான இவ்வீதியின் புனரமைப்புத் தொடர்பாக கடந்த வியாழக்கிழமை இருபாலை பேச்சி அம்மன்கோவிலில் மக்களுடனான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில், இவ்வேலையில் மக்களுடைய பங்களிப்புத் தொடர்பாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரினால் விளக்கமளிக்கப்பட்டதைத் தொடர்ந்து புனரமைப்பு வேலைகளைக் கண்காணிப்பதற்கு பிரதேச மக்களைக் கொண்ட அபிவிருத்திக் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

இக்கலந்துரையாடலில் வலி கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் இராமநாதன் ஐங்கரன், பிரதேச சபை செயலாளர் திருமதி ஜேந்தாசோமராஜ், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் குணநாயகம், பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலக பொறுப்பதிகாரி, தொழில நுட்ப உத்தியோகத்தர் மற்றும் பிரதேச மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (135)



தெல்லிப்பளை பொலிஸாரினால் தங்கம்மா அப்பாக்குட்டி மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட மக்களுக்கான சிநேகபூர்வமான நடமாடும் சேவையில் பயனாளி ஒருவருக்கு பொலிஸ் அதிகாரி பழ மரக்கன்று வழங்குவதையும் அருகில் பொலிஸ் உத்தியோகத்தர் நிற்பதையும் காணலாம்.

## மணிக்கூட்டுக் கோபுரத்தில் நேரத்தைப் பார்க்க முடியும்

(யாழ்ப்பாணம்)

மிக நீண்ட காலமாக இயங்காமல் இருந்த யாழ். நகரப்பகுதியில் அமைந்துள்ள மணிக்கூட்டு கோபுர மணிக்கூடு மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது.

மேற்படி மணிக்கூட்டுக் கோபுரம் இயங்காமை குறித்து பல்வேறு சந்தர்ப்பங்களில் தினமுரசு பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் தற்போது அதற்குப் பலன் கிடைத்துள்ளது.

யாழ். மாநகர சபையின் பராமரிப்பில் உள்ள மணிக்கூட்டு கோபுரம் அண்மையில் தனியார் தொலைத் தொடர்பு கம்பனியின் பராமரிப்பில் கொடுக்கப்பட்டது. இதன் காரணமாக அந்த கம்பனி டிஜிட்டல் தொழில்நுட்பத்துடன்கூடிய மணிக்கூட்டினை பொருத்தி பராமரித்து வந்த நிலையில் கடந்த சில மாதங்களாக பழுதடைந்து காணப்பட்டது.

இந்த கடிகாரத்தின் ஸ்தம்பித நிலையில் நகரப்பகுதிக்கு வரும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். இந்த விடயம் பல தரப்பினூடாக வலியுறுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது மிகவும் சிறந்த முறையில் மீண்டும் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. (எஸ்.எஸ்)

## பருத்தித்துறை சுகாதார பரிசோதகர்களால் வடமராட்சியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(வடமராட்சி)

வடமராட்சிப் பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க பருத்தித்துறை சுகாதார வைத்திய பரிசோதகர்களும், வடமராட்சி சுற்றுப்புறச் சூழல் பொலிஸ் பிரிவினரும் இணைந்து வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது மழை காலம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலும் குட்டைகள் மற்றும் சிறு சிறு தேக்கங்களில் நுளம்பு உருவாகக் கூடிய கழிவுகளை வீதியோரங்களில் கொட்ட வேண்டாம் எனவும் வீடுகளில் கழிவு நீர் தேங்கக்கூடிய பொருட்களை அழித்து நுளம்பு உருவாகும் அபாயத்தை தடுக்குமாறு ஒலி பெருக்கிகள் மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றனர்.

இதேவேளை, அண்மையில் பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் இயங்கும் கடைகளுக்கு முன்னாள் குப்பைகள் குவிக்கப்பட்டிருந்ததை அடுத்து கடை உரிமையாளர்களுக்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டதாக பருத்தித்துறை சுற்றுப்புறச் சூழல் பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட வடமராட்சி கிழக்கு பிரதேசம் மலேரியா அபாயமுள்ள பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டமையால் அங்கு கிராமங்கள் தோறும் விழிப்புணர்வுகள், கண்காட்சிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் அண்மையில் இப்பிரதேச மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளதாக பொது சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-116)

## தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு 19 பயனாளிகளுக்கு அனுமதி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் தற்செயல் நிவாரணம் பெறுவதற்கு விண்ணப்பித்த 19 பயனாளிகளுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுக்கான அனுமதி சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

கீழ் குறிப்பிடப்படுவோர் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் தென்மராட்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சமூகமளிக்குமாறு பிரதேச செயலர் திருமதி அஞ்சலி தேவி சாந்தசீலன் அறிவித்துள்ளார்.

இதன்படி அ. நடராசா (நுணாவில் கிழக்கு), து. சசிகலா (நுணாவில் மேற்கு) மற்றும் கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த பு. புஸ்பகரன், செ. சௌந்தரராசா, வி. கவிதா, க. ஸ்ரீஸ்கந்தராசா, மு. சரஸ்வதி, ச. கணேஸ், து. லிங்கராசா, த. சிவகரன், ஆ. லோகேஸ்வரன், சி. செல்வரதி, ப. விஜிதா, ஜெ. சாந்தி, மு. லோகேஸ்வரன், த. சிவக்கொழுந்து (சிவன் கோயிலடி, சாவகச்சேரி), சி. முருகானந்தன் (மந்துவில் வடக்கு கொடிகாமம்), மா. ஈஸ்வரி (பாலாவி தெற்கு கொடிகாமம்), ச. ஜெயக்குமாரி (வரணி - இயற்றாலை) ஆகியோருக்கே இந்நிவாரணத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (உ-11)

## காக்கைதீவு கடற்கரைப் பகுதியில் பொது மீன்சந்தை அமைக்க முடிவு

(யாழ். நிருபர்)

காக்கைதீவுக் கடற்கரையில் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியில் மீன்சந்தை அமைக்கப்படவுள்ளது.

வலி தென்மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காக்கைதீவுக் கடற்கரையில் கடற்றொழிலில் ஈடுபடும் சாவல்கட்டு, காக்கைதீவு, ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான மீனவர்கள் பிரதேச சபைக்கு வரி செலுத்தாமல் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள கூறுவிலை மண்டபத்தில் வைத்து கடலுணவு வகைகளை வியாபாரிகளுக்கு மொத்தமாக விற்பனை செய்து வருகின்றனர்.

மீனவர்களிடம் கடலுணவு வகைகளை வாங்கும் வியாபாரிகளும் இடநெருக்கடியின் மத்தியில் கடற்றொழிலாளர்களைப் போல பிரதேச சபைக்கு வரி செலுத்தாமல் கூறுவிலை மண்டபத்தில் வைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் பிரதேச சபைக்கு கிடைக்கும் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் பாவனையாளர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த பல மாதங்களாக நடைபெற்றுவரும் இந்த நிலை குறித்து பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டதைத் தொடர்ந்து வியாபாரிகளிடமிருந்து வரி வசூலிக்கும் வகையில் கூறுவிலை மண்டபத்திற்கு அருகாமையில் பொது மீன் சந்தை ஒன்றை அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக சந்தை அமைக்கப்படுவதால் நுகர்வோர் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தீர்வுக்கு வருவதோடு மாலை நேரச் சந்தை நடைபெறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (10)

## நடமாடும் சேவை

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பொலிஸாரினால் நவாலி சென் பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் இன்று நடமாடும் சேவை ஒன்று நடத்தப்படவுள்ளது.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேர்த் தலைமையில் காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ள இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமண சான்றிதழ்கள் மற்றும் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## மாணவர்களுக்கான போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

(வலிகாமம்)

யுனிசெவ் ஆதரவுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையே கண்ணிவெடி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வலிகாம கல்வி வலயத்தினூடாக நடத்தப்பட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர் விபரம் வருமாறு:

வினாடி வினா

தரம் 6 - 9

ச. தனைக்சன், சி. யசிதா, ச. தர்சனா, செ. சோபிகா, ச. சாரங்கா (பொன்னாலை வரதராஜப்பெருமாள்)

தரம் 10-11

சி. ஜெயதரன், க. குகவர்மன், இ. ரஜிவர்ணன், க. துளசிகன், வி. ரஷிகேசவன் (மகாஜனாக் கல்லூரி)

தரம் 12-13

ரா. பகிர்ராஜ், சி. லனுஜன், ரா. ஜினோத்ராஜ், சோ. லக்சிகா, பொ. பிரியதர்சினி (பன்னாலை சேர் கனகசபை அ.த.க.பா.) (06)

## தல யாத்திரை செல்வோருக்கு அடையாள அட்டை வழங்கல்

(யாழ். நிருபர்)

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் தல யாத்திரை செல்ல விரும்பும் யாத்திரிகர்களுக்கு அடையாள அட்டை வழங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி தல யாத்திரை செல்ல விரும்பும் ஐயப்ப பக்தர்கள் இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிமனையில் அல்லது நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியுமென இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ். மாவட்டப் பணிமனையின் அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தெரிவித்துள்ளார். (10)



வேலணை துறையூர் ஐயனார் முன்பள்ளியின் குழந்தைகள் தின நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் கலை நிகழ்வை காணலாம். (85)

## முகாமையாளர் நியமனம்

(யாழ். நிருபர்)

தீவக கல்வி வலயத்தின் வேலணை ஆசிரியர் வள நிலையத்திற்கு முகாமையாளராக இ. விஜயதீபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் கடந்த வாரம் ஆசிரிய வள முகாமையாளராகப் பதவியேற்றுக்கொண்டுள்ளார். (10)



# யாழில் 20 ஆயிரம் விதவைகள் 2000 சிறுவர் தொழிலாளர்கள்

(வடமராட்சி)

யாழ் மாவட்டத்தில் 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் விதவைகளாகியுள்ளனர். இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லாமல் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் அல்வாய் - மாலுசந்தியில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

நல்லொழுக்கம் என்பது அன்றிருந்த மூதாதையர்களால் கட்டிக்காக்கப்பட்டது. ஆனால் இன்றைய நாகரிக வளர்ச்சியில் பெண்களிடம் இந்நல்லொழுக்கம் இல்லாது போயுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பல மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் கலாசாரம், பண்பாடுகளில் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது.

பெண்களுக்கெதிரான கொடுமைகள் நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

அதாவது 30 வருடங்களுக்கு முன்பிருந்த யாழ்ப்பாணக் கலாசாரத்தை விட இன்றைய கலாசாரம் சீரழிந்து காணப்படுகிறது.

இன்று பலர் அங்கவீனர்களாக வாழ்கின்றார்கள். இன்றும் பலர் அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர் எனத் தெரிவித்தார். (உ-116)

# திண்ணபுர அந்தாதி நூல் அறிமுக விழா

(யாழ்.நிருபர்)

கரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய 'திண்ணபுர அந்தாதி' நூல் அறிமுக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் கலந்து கொள்கிறார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக மொழியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் க.இரகுபரன் சிறப்பு விருந்தினராகவும், அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மட தலைவர் ஸ்ரீ ஸ்வாமி சர்வரூபானந்தா ஆசியுரை வழங்குவார். (10)

# வேலணைப் பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல்



(தீவகம்)

வேலணைப் பிரதேச சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

இதில் நெல்சிப் திட்டத்தின் 2011 ஆம் ஆண்டுக்கான வேலைத் திட்டங்கள் மற்றும் அடுத்த கட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக அடுத்த திட்டத்திற்கான வீதிகளும் புனரமைப்புச் செய்யப்படவேண்டிய கட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் நெல்சிப் பிரதித் திட்டப் பணிப்பாளர் பொறியியலாளர் ஜே.சிவபாத சுந்தரம், வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா மற்றும் செயலாளர் தொழில்நுட்ப உத்தியோகத்தர் எனப் பலர் கலந்து கொண்டு திட்டங்களைப் பார்வையிட்டனர். (உ-85)

## வாழ்வு எழுச்சித்திட்டத்தின் கீழ்

# வீட்டுத்தோட்ட செய்கையில் 18 ஆயிரம் விவசாயிகள் தெரிவு

(வேலணை )

வேலணைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளை வீட்டுத்தோட்டச் செய்கையில் ஈடுபடுத்தும் முகமாக வாழ்வு எழுச்சித் திட்டத்தின் கீழ் 18 ஆயிரம் விவசாயப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பயனாளிகளுக்கு விதை வகைகளும், உரவகைகளும் இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் விவசாய நடவடிக்கைகளைக் கவனிக்கும் முகமாக 9 ஆயிரம் விவசாய பயனாளிகள், கிராம சேவை அலுவலர்களூடாகவும், 9 ஆயிரம் விவசாய பயனாளிகள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஊடாகவும் கவனிக்கத்தக்க வகையில் பிரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை விவசாய பயனாளிகளது நடவடிக்கைகளை எவ்வாறு கவனிப்பது அவர்களின் செயற்பாடுகளை எவ்வாறு ஊக்கப்படுத்துவது போன்ற விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிப்பட்டறை அண்மையில் வேலணைப் பிரதேச செயலர் காரியாலய பொது மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் விவசாயத் திணைக்களத்தினைச் சேர்நத பல விவசாய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

இதில் வீட்டுத்தோட்ட விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(26.11.2011 – சனிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 10 ஆம் நாள்.
இராகுகாலம் 9.12-10.42, சுபநேரம் 3.12 -4.42வரை
நட்சத்திரம்: கேட்டை பி.இ . 1.36 வரை
திதி: பிரதமை மு.ப 10.37 வரை, கரிநாள்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:– பணக் கஷ்டம், எதிரியை வெல்லுதல், தொழில் ஆதாயம், சகோதர நன்மை, உடல் சுகவீனம்.

ரிஷபம:– வீண் அலைச்சல், பணம் வரும், நினைத்ததைச் சாதித்தல், அதிகாரப் போட்டி, தேக ஆரோக்கியம்.

மிதுனம் :– பணக் கஷ்டம், சகோதர வெறுப்பு, இனசன அழைப்பு, மனக்கவலை, உடல் பலவீனம்.

கடகம்:– முகங்கோணுதல், பணம் வரும், தவறான முடிவு, உல்லாசப் பயணம், தேக சுகம்.

சிம்மம்:– காசுக்கஷ்டம், சங்கடமான நிலைமை, சுபகாரியப் பேச்சு, சகோதர நன்மை, கடின வார்த்தை பேசல்.

கன்னி :– வீண்கலவரம், காசுவரும், மனக்குழப்பம், தொழில் கஷ்டம், தேக பலவீனம்.

துலாம் :– காசுக்கஷ்டம், உடம்பில் சோர்வு, காரியத்தடை, தொழில் மந்தம், கடின வார்த்தை பேசல்.

விருச்சிகம்– குடும்பத்தில் மகிழ்ச்சி, காசு வரும், சுபகாரியச் செலவு, சகோதர நன்மை, பாராட்டுரை.

தனுசு:– காசு வரும், காரிய வெற்றி, நண்பர் வருகை, வீண் கலவரம், தவறான முடிவு.

மகரம:– சங்கடம் தீரும், காசுவரும், வேலைப்பழு, எதிர்பாராத உதவி, மன நிறைவு.

கும்பம் :– காசுக்கஷ்டம், குடும்பத்தில் கவலை, வேண்டாத செயல், அவசர முடிவு, தேகசுகம்.

மீனம் :– வீணான சந்தேகம், காசுவரும், இனசன உதவி, தவறான முடிவு, தேக ஆரோக்கியம்.


# அழுக்காகும் வெள்ளைச் சீருடை மாணவர்கள் பெரும் அவலம்

(அச்சுவேலி)

திருத்தவேலைகளுக்கு உட்படுத்தப்பட்டு வரும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதான வீதியின் கோப்பாய் முதல் இருபாலை வரையான பகுதிகளில் பயணம் செய்வதில் மாணவர்கள், பாதசாரிகள் மற்றும் வாகன ஓட்டுனர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதை காணக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக கோப்பாய் சந்தி மற்றும் இருபாலைச் சந்தியை அண்மித்த கற்பகப்பிள்ளையார் கோயிலடி, சலவைக் குளத்தடிப் பகுதிகளில் மழைவேளைகளில் வெள்ளம் தேங்கி நிற்பதாலும் பால வேலைகளுக்கான கட்டடப் பொருட் கள் போடப்பட்டிருப்பதாலும் அப்பகுதிகளினூடாக பிரயாணம் செய்வதில் பெரும் இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக இப்பகுதியினூடாக பாடசாலை மாணவர்கள் சீருடையில் செல்லும் வேளைகளில் வாகனங்கள் பயணிக்கும்போது வெள்ளநீர் உடைகளில் பட்டு மாணவர்கள் அழுக்காகிச் செல்லும் நிலை காணப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (03)



## பரமர் சங்கமம்

'வருசம் பூராவும் வெய்யில் காயட்டும் அதைத் தாங்குவம். ஒரு நாள் மழையைத் தாங்க மாட்டம்" இது இந்த யாழ்ப்பாணத்தாரின் குணம்.

இலங்கேலயே மற்ற மற்ற இடங்களில வருசத்தில முக்கால்வாசி நாட்களிலும் மழைதான். அதுகளும் தாங்கிக் கொண்டு வாழுதுகள்.

இல்லாமலும் அந்த மழேலதான் விவசாயம் செய்வதும் விதைப்பதும், அறுப்பதும், சின்னப்பொடியனா இருக்கேக்க இரத்தினபுரி, நிவித்திக்கல பகுதியில் இருந்தனான்.

அங்க உள்ள வயல்களில் வருசம் பூராவும் தண்ணி நிக்கும். அதில தான் நாத்துநட்டு கதிரை விளைவித்து அறுவடை செய்து நெல்மணியை எடுத்து அரிசி ஆக்கிறேண்டாப் பாருங்கோவன்.

இஞ்சையும் மழேக்கை தோட்டக்காரர் மட்டும் கரைச்சலில்லாமல் தோட்டம் செய்வினம். தண்ணி இறைப்புச் செய்யத் தேவையில்லை அல்லவா?

அந்த நேரங்களில்தான் தோட்டக்காரர் தங்கட வெளிவேலைகளைப் பார்த்துக்கொள்வார்கள். அதாவது வீட்டுக்குத் தேவையான மளிகைச் சாமான், உடுபுடவை, நகை நட்டுக் கொள்வனவு, வைத்தியசாலை, பாடசாலை பரிகாரங்களைச் செய்வினம்.

மழை தொடங்கினால் உழைப்பு இல்லாமல் போய்விடுகிற தொழில்களும் இருக்கு. அதில முக்கியமானது கட்டடத்தொழில்.

கடல் தொழிலில் மழைக்கு நல்ல மீன்பிடி ஏற்படும். இல்லாமலும் காற்றுச் சீறல் கச்சானாக வீசினால் பெரிய பெரிய ஓரா மீன்கள் பெருங்கடல்களில் இருந்து எடுபட்டு வந்து பிடிபடும்.

அந்தக் காலத்தில் 500 ரூபா விக்கும் ஓரா மீன்களை நூறு நூற்றைம்பது ரூபாவுக்கெல்லாம் வாங்கக் கூடியதாக இருக்கும். மழைகாலத்தில் பாதிப்புக்கு உள்ளாகும் மற்றொரு தொழில் சிகை அலங்காரம்.

ஏனெண்டா மழைக் குளிரில் தலைமயிரை வெட்டி முழுக எவரும் விரும்ப மாட்டினமல்லே. உப்புடி மழையால் பாதகமும் சாதகமும் ஏற்பட்டபோதும் மழை வீழ்சி இல்லாமல் எந்தத் தொழிலும் ஏற்றம் இருக்காது.

குடிநீர் மற்றும் குளிக்கும் நீர் மழை வீழ்ச்சி இல்லையெண்டால் கிடைக்குமா? அதனால் மழை அத்தியாவசியமான ஒன்று என்றால் மிகையாமோ?

'மழை வா வெய்யில் போ" எண்டும் வெய்யில் வா மழை போ" எண்டும் சின்னன்ல நாங்க பாடியாடினதையும், இண்டைய சிறுவர்கள் அதனைத் தொடர்வதையும் பரவலாகக் காணலாம்.

அப்புடி இருக்க மழை எண்டால் சனி மழை... கிரக மழை" எண்டேன் சபித்துக் கொள்கிறார்கள்?

வெய்யிலில் "ஆ.... ஊ...." எண்டு அலுத்துக் கொண்டாலும் எந்த வேலையையும் திட்டமிட்டபடி செய்து முடித்து விடலாம். மழையெண்டால் வெளியில் வெளிக்கிடவே விருப்பம் இல்லாமல் இருக்கும் அதுதான்.

குடை அல்லது றெயிங்கோட் இல்லாமல் வெளியில் இறங்க முடியாது. ஆயினும் எமது முன்னோர் 'அடாது மழை பெய்தாலும் விடாது நாடகம் நடத்தியே தீருவோம்" என்ற கூற்றினூடாக விடா முயற்சியைக் கொண்டிருந்ததால் தான் இண்டைக்கும் மனித சமுதாயம் வாழ்ந்து வருகிறதில்லையா?

மரஞ்செடி கொடி வளர மட்டென்றில்லாமல் மனித வளர்ச்சிக்கும், வெய்யிலும், மழையும் இன்றியமையாதென்றால் பொய்யே? மழை கால இருட்டானாலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது" பாருங்கோ!



# இராசி பலன் 2012

## மேஷ ராசி



அஸ்வினி, பரணி, கிருத்திகை 1ஆம் பாதம் வரை
பெயர் முதல் எழுத்துக்கள் சூ.சே.சோ.லா.லீ.லு.லே.லோ.அ.

நீங்கள் மெலிந்த தேகம் உடையவர்கள், வலிமையும், உறுதியும் மிக்கவர்கள். வசீகரமான பார்வையும் உடையவர்கள். உடலைப் பேணிக் காப்பதில் அக்கறை உடையவர்கள். மத்திமமான நிறத்தை உடையவர்கள்.

திருமணத்திற்குப் பிறகு அதிக அளவில் முன்னேற்றம் அடைவீர்கள். பண வசதியை உடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களைப் பற்றி இனி அறிய முற்படலாம்.

2012 புத்தாண்டில் ஆண்டு முழுவதும் குரு சாதகமாகவே சஞ்சரிப்பதால் பணவசதிகள் எப்போதும் போல் இருக்கும். எடுக்கும் முயற்சிகள் யாவும் ஒன்றுக்கு பாதியான பலனைக் கொடுக்கும். நண்பர்கள் வகையில் கொஞ்சம் உதவிகரமாக நடந்து கொள்வார்கள். உறவினர்கள் வருகைகளும், விருந்துபசாரச் செலவுகளும் ஏற்படும். வாகன வசதிகள் சுமாராக இருக்கும். போட்டி, பந்தய விவகாரங்களில் அளவான நன்மைகள் உண்டாகும். வழக்கு விவகாரங்களில் மந்தமான போக்கு தென்படும் உங்களுடைய எல்லா வகையான காரிய செயற்பாடுகளிலும் நிதானமாகவும், முன்னெச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டிய காலகட்டம் இது. புதிய பொன், பொருள்கள் செருவதில் இனி தங்கு தடை இல்லை எனலாம். உறவினர்கள் வருகை சுபகாரியங்களைத் தருவதாக இருக்கும். குடும்பத்தில் தன்னிறைவு இருக்கும். பெற்றோர்களுக்கு நல்ல சிறப்பும், சகோதர வகையினர்களுக்கு நல்ல உயர்வு ஏற்படுவதுடன் அவர்களால் உதவிகரமான பலன்கள் ஏற்படும். கண்வன், மனைவி உறவு அன்யோன்யத்துடன் இருக்கும். மனைவியால் பெருமளவு மகிழ்ச்சியும் பல்வேறு உதவியும் எதிலும் பக்கபலமும் ஏற்படும். புத்திர வகையினர் நல்ல முன்னேற்றங்கள் பெறுவார்கள். 15-05-2012 முதல் 27-06-2012 வரை சுக்கிரன் வக்கிரம் பெறுவதால் பணமுடை, வாக்கு தவறும் சூழ்நிலைகள், குடும்பச் செலவுகள் அதிகரிப்பதால் நெருக்கடிகள் வந்து விலகும்.

24-01-2012 முதல் 14-04-2012 வரை செவ்வாய் வக்கிர மடைவதால் பிரச்சினைகளை சமாளிக்க இயலாத சூழ்நிலைகள், சகோதர வகையாலும் பூமி நிலம் வகையாலும் செலவு, குழப்பமான சூழ்நிலைகள் கலந்திருக்கும்.

எனினும், சனி வக்கிரத்தில் மீண்டும் 6 மிடம் செல்வது 6.5.2012 முதல் 04-05-2012 வரை உங்களுக்கு எதிலும் வெற்றியடையும் சூழ்நிலையை அளிக்கும்.

2012 ஆண்டில் உங்களுக்கு குருப்பெயர்ச்சி முதல் 17-05-2012 வரை பணவசதி அதிகரிக்கும். சுபச் செலவுகளும் முதலீடுகளும் அதிகம் காணப்படும். பிரயாணங்கள் வெற்றி தரும். தொழில் வகையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பதவி வருவாய் உயர்ந்து வரும். ஸ்திர சொத்துக்களில் முதலீடுகள் செய்வீர்கள். வேலையாட்களைப் புதிதாக அமைக்கும் வசதிகள் அதிகரிக்கும். நினைத்த யாவும் சாதிக்கப்பட்டுவரும். புதிய பொன், பொருட்கள் சேரும். பெற்றோர்க்கு உதவிகரமாக பக்கபலமாகச் செயற்படுவீர்கள். சகோதர வகையினர் எதிலும் கூட்டாக, உதவிகரமாக இருப்பார்கள். இருப்பிடத்தில் நல்ல பக்கபலம் உண்டாகும். போட்டி பந்தயங்களில் சுலப வெற்றி பெறுவீர்கள். கொடுக்கல் வாங்கலில் நன்மையுண்டு எதிர்ப்புகள் ஏதுமின்றி விலகிவிடும்.

செய் தொழில் எதுவாக இருந்தாலும் தாராளமான வருவாய் உயரும். பணியில் சுபலம் ஏற்படும். மனத்திருப்தியும் இருக்கும். அரசாங்க சலுகைகள் கிடைக்கும். அதிகாரிகள் உதவிகரமாகச் செயற்படுவார்கள். வசதியான இடமாற்றம், பதவி செல்வாக்கு உயருதலும் உண்டு. போட்டி, இடைஞ்சல்கள் வெகுதூரம் விலகிவிடும். பதவி உத்திகள் கடைப்பிடித்து வியாபாரத்தில் உயர்வடைவதும் அதிகாரிகளின் நட்புறவால் உத்தியோகத்தில் மனநிறைவு காண்பதும் முதலாளிகளால் சலுகைகளை தொழிற் சாலைகளில் பெறுவதுமாக அவரவர் தொழில்களில் உயர்வடையும் சூழ்நிலைகள் இருந்துவரும். மொத்தத்தில் இது ஒரு தன்னிறைவு தரும் வருடமே!

**பெண்களுக்கு:** இந்தக் கால கட்டம் உங்களுக்கு ஏற்றத்தை கொடுப்பதாக இருக்கிறது. கணவன், மனைவி உறவு நிலை அன்னியோன்னியமாக இருக்கும். குழந்தைகளால் செலவும், சந்தோஷங்களும் இருக்கும். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் எச்சரிக்கையாகவும் நடந்து கொள்ள வேண்டும். பொன், பொருள் சேர்க்கைக்கும் இப்போது அவசரப்பட வேண்டாம். காரியச் செயற்பாடுகளில் எதையும் திட்டமிட்டு செய்து வந்தால் எந்தக் கஷ்டமும் சங்கடங்களும் வராமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

**உத்தியோகஸ்தர்களுக்கு** : உங்களுடைய நீண்ட கால ஆசைகளையும் கனவுகளை இப்போது சிரமம் இன்றி நிறைவேற்றிக் கொள்ளலாம். தடைப்பட்டு வந்த காரியங்கள் யாவும் புத்துயிர் பெற்று வேகமாக செயற்படும். இடமாற்றமோ, பதவி உயர்வோ வேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிகாரிகள் உதவிகரமாக நடந்து கொள்வார்கள்.

**வியாபாரிகள் :** வியாபாரத்தில் இப்போது பல காரிய சாதனைகளை செய்து நல்ல வியாபார அபிவிருத்தி செய்து முன்னேற்றம் அடைவீர்கள். தனவரவுகள் தாராளமாகக் கிடைப்பதால் எதையும் சாதிக்க சிரமம் இருக்காது. இதுவரை தாமதப்பட்டு வந்த காரியங்கள் கூட இப்போது வெற்றிகரமாக நிறைவேறி உங்களை திருப்திப்படுத்தும்.

**கலைஞர்களுக்கு :** கலையார்வம் மிகும். இப்பயிற்சியில் நல்ல திறமை உண்டாகும். தொலைவிடயங்களில் இருந்தும் நல்ல வாய்ப்பு வரவேற்பு பெறுவீர்கள். வருவாய் கணிசமாக உயரும். புதுவித முயற்சிகளில் ஈடுபடும். பிஸியாகவும், பரவலாகவும் கலைச்சேவைகள் இருந்து வரும். திடீர் வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்.

**தொழிலாளர்களுக்கு :** வேலையில் இருந்து வந்த கடின உழைப்பு குறைந்து சுலபமானதாக இருக்கும். முதலாளி வர்க்கத்தாரின் சலுகைகள் உங்களை உற்சாகப்படுத்தும். சக தொழிலாளர்களின் அன்பும், ஒத்துழைப்பும் கிடைக்கப்பெறுவீர்கள். வாழ்க்கை தரம் முன்னேற்றப் பாதையில் செல்லும்.

**விவசாயிகளுக்கு :** இயற்கை சூழ்நிலையும், நீர் வளமும், நில வளமும் யாவும் உங்களுக்கு சாதகமாக இருந்து இப்போது கை கொடுக்கும். எனவே, விவசாயத்தை அமோகமாக விளைவித்து அதிகப்படியாக மகசூலை குவித்து அமோகமான இலாபங்கள் அமையலாம்.

**பொதுச்சேவையினர்க்கு :** வாக்கு பலிதமும், வாக்கு சாதுர்யமும் பாராட்டும் தரும். புதிய இடங்களில் வரவேற்பு பெற்று சேவையை விஸ்தரிப்பு செய்வீர்கள். உதவும் நண்பர்களின் கூட்டு கிடைக்கப்பெறும். அரசாங்க, அயல் தேச வாய்ப்புகளும் உண்டு. போட்டி, பொறாமை நீங்கப்பெறும். உற்சாகமும் உத்வேகமும் அதிகரித்து வரும்.

**மாணவர்களுக்கு :** கல்வி கேள்விகளில் ஊக்கம், தேர்ச்சியளித்தாலும் சிறிது தளர்ச்சியும் உண்டு. கல்வியில் ஊக்கம், உழைப்பு இருப்பின் தேர்ச்சி ஏற்படும். கேளிக்கைகளில் ஈடுபாட்டைக் குறைப்பது நல்லது. தொழில் நுட்பக் கல்வித் தேர்ச்சி நன்மையும்.

**அச்சுவினி நட்சத்திரக்காரர்களுக்கு :** வெளிதேச வாய்ப்புகள் ஒன்று மாற்றி ஒன்றாகி வரும் நண்பர்கள் பலர் ஏற்படுவார்கள். கூட்டு முயற்சியும் வெற்றி தரும். அரிய செயல் பல புரிவீர்கள்.

# உலகக் கிண்ணத் தொடரில் பத்து அணிகள் ஐ.சி.சி. அங்கத்துவ நாடுகள் கடும் எதிர்ப்பு

(டுபாய்)

ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 10 அணிகள் மாத்திரம் பங்குபற்ற அனுமதிக்கப்படும் திட்டத்திற்கு சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) பூரண அங்கத்துவமுடைய 10 நாடுகளும் எதிர்ப்பு தெரிவித்ததால் அத்திட்டம் ஒத்தி வைக்கப்பட நேர்ந்தது என ஐ.சி.சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹாருன் லோர்கட் தெரிவித்துள்ளார்.

பத்து அணிகளை மாத்திரம் அனுமதிப்பதென்றால் பூரண (டெஸ்ட்) அங்கத்துவம் உடைய அணிகளும் தகுதி அடிப்படையிலேயே இச்சுற்றுப்போட்டிக்குத் தெரிவாக வேண்டியிருக்கும் என்பதே பிரதான ஆட்சேபனைக்குரிய விடயமாக இருந்தது என ஈ.எஸ்.பி.என்.- கிரிக் இன்போவுக்கு அளித்த செவ்வியில் ஹாருன் லோர்கட் கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ண சுற்றுப் போட்டியில் 10 அணிகள் மாத்திரமே அனுமதிக்கப்படும் என ஐ.சி.சி. கடந்த ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தது.

ஆனால் ஜூன் மாதம் ஹொங்கொங்கில் நடைபெற்ற ஐ.சி.சி. வருடாந்த மாநாட்டின் போது, முழு அந்தஸ்துள்ள 10 அணிகளையும் நேரடியாகவும் இணை அங்கத்துவம் உள்ள நாடுகளுக்கிடையில் தகுதிகாண் போட்டிகளை நடத்தி மேலும் 4 அணிகளையும் சேர்ப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் 10 அணிகள் மாத்திரமே பங்குபற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் "அனைத்து அங்கத்துவ நாடுகளுக்கிடையிலும் தகுதி அடிப்படையில் 10 அணிகளை தெரிவுசெய்து போட்டி களை நடத்துவது சிறந்த சுற்றுப்போட்டியாக அமையும் என நான் இன்னும் நம்புகிறேன். சர்வதேச கிரிக்கெட்டை தந்திரோபாய ரீதியில் மறுசீரமைப்பதற்கும் மூன்று வகையான போட்டிகளையும் பாதுகாத்து ஊக்குவிப்பதற்குமான திட்டத்தின் ஒரு பகுதியே இதுவாகும் எனவும் ஹாருன் லோர்கட் தெரிவித்துள்ளார்.

## அஜ்மல் அச்சுறுத்தலாக இருப்பார்

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்துவீச்சாளர் சயீட் அஜ்மல் தமது அணிக்கு பாரிய சவாலாக இருப்பார் என பங்களாதேஷ் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் தமீம் இக்பால் கூறியுள்ளார்.

இந்த மாதம் பங்களாதேஷிற்கான கிரிக்கெட் விஜயத்தினை பாகிஸ்தான் மேற்கொள்ளவுள்ள நிலையில் தமீம் இக்பால் இந்தக் கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இந்த ஆண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிகளவு விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் சயீட் அஜ்மால் முன்னிலையிலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புலிகள்....

1. தலைவர்கள் தவிர புலிகளின் உறுப்பினர்களுக்கும் இலங்கை அரசு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும். 2. புலிகள் தமது ஆயுதங்களை ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்க வேண்டும். 3. புலிகளின் உறுப்பினர்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையிடமோ சரணடைய வேண்டும். 4. சம்பந்தப்பட்டவர்கள் பொதுமக்களின் நலன்காப்பதிலும் அரசியல் தீர்வு காண்பதிலும் உதவி செய்வார்கள்.

இதனையடுத்து திருகோணமலைக்குக் கலங்களை அனுப்பும் ஏற்பாட்டிலும் அமெரிக்க அரசு இறங்கியது. ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் யுத்தமுனைக்குச் செல்வது என்றும், அமெரிக்காவும் இந்தியாவும் முன்னின்று இதனைக் கண்காணிப்பது என்றும் ஏற்பாடாகி, இலங்கை அரசிடம் பேசப்பட்டபோது, இலங்கை அரசு சரணடைவதற்கு ஒப்பும் போலத் தோன்றியது என்றும், ஆனால் ஐக்கிய நாடுகள் இதில் தலையிடுவதை இலங்கை இராணுவம் விரும்புமா எனச் சொல்லமுடியாது என்பதாக இலங்கை அரசு கருதியதாக அறிக்கை பதிவு செய்கிறது.


மேற்கத்திய, நோர்வே, அமெரிக்க அரசுகளின் ஏற்பாட்டின் படி சரணடையும் புலிகளின் தலைவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படுவார்கள் எனவும் அவர்களது பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படும் என்பதாகவும் இருந்தது. ஆனால் பின்னால் இலங்கை அரசினால் மலேசியாவில் கைது செய்யப்பட்ட குமரன் பத்மநாதன் கூற்றின்படி 25 முதல் 50 வரையிலான புலிகளின் தலைவர்களும் அவர்களது குடும்பத்தினரும் வேறு நாடொன்றுக்குச் செல்வது சாத்தியம் என புலிகள் எதிர்பார்த்ததாகவும் தெரிவித்தார்.

புலிகளின் தலைவர் பிரபாகரன் இதனை முழுமையாக நிராகரித்தார் என்பதனை அறிக்கை பதிவு செய்கிறது. சம்பந்தப்பட்ட ராஜதந்திரிகள் இதனைப் பற்றிக் குறிப்பிடும்போது புலிகள் ஒரு கனவுலகத்தில் வாழ்கிறார்கள் என்று சொன்னதாக அறிக்கை குறிப்பிடுகிறது. புலிகள் மாயமந்திரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் போலத் தோன்றுகிறது. முன்னைய பல்வேறு சந்தர்ப்பங்களில் இம்மாதிரியிலான மாயங்கள் ஏற்பட்டு பிரபாகரன் தப்பியது போல, இம்முறையும் நடக்கும் என புலிகளின் தலைமை கருதியது என நோர்வேஜிய ராஜதந்திரி இது குறித்துச் சொன்னதாக அறிக்கை பதிவு செய்கிறது.

தமது பொறி இறுகிக் கொண்டு போகும் நிலையில் புலிகள் சரணடைவதை இலங்கை அரசு விரும்பவில்லை. மேற்கல்லாத அரசுகள் இப்பிரச்சினையை முடியுங்கள் எனச் சொல்லின. 2009 ஏப்ரல் 19 பிரெஞ்சு வெளியுறவு அமைச்சர் குச்னர், பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் மிலிபான்ட் ஆகியோர் இலங்கை வருகிறார்கள். இலங்கை அரசு தனது நிலையை மாற்ற மறுத்துவிடுகிறது. மே 9 ஆம் திகதி புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தொடர்பு கொள்ளும் இந்திய உள்துறையமைச்சர் ப.சிதம்பரம் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஒரு வரைவின் அடிப்படையில் ஆயுதங்களைக் கீழே வைக்க புலிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதனைச் சொல்கிறார். அன்றைய நிலையில் தேர்தலில் பிஜேபி வெல்லும் எனவும், இலங்கை அரசை போர்நிறுத்தத்திற்கு பிஜேபி வலியுறுத்தும் எனவும், ஆகவே சிதம்பரத்தின் திட்டம் ஒரு காங்கிரஸ் தந்திரம் எனவும், அதனை நிராகரிக்குமாறும் பிரபாகரனிடம் சொல்கிறார் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான வை.கோபாலசாமி என்பதனை அறிக்கை குறிப்பிடுகிறது.

2009 மே 18-19 திகதிகளுக்கிடையிலான இரவில் இறுதி நேரத்தில் தாம் சரணடைவதான விருப்பத்தை நடேசன், புலித்தேவன் போன்றவர்கள் நோர்வேஜியர்களையும் பிரித்தானியா, அமெரிக்க தூதரகங்களையும், கொழும்புத் தமிழ் அரசியல்வாதியான சந்திரநேருவையும் தொடர்பு கொண்டு சொல்கிறார்கள். ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷவுடன் பேசி அவர்கள் வெள்ளைக் கொடியுடன் சரணடைவது எனவும் ஏற்பாடாகிறது. தொலைபேசி உரையாடல் முடிந்து சில மணிநேரங்களில் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டதாகச் செய்தி வருகிறது என்கிறது அறிக்கை. தொடர்ந்து புலிகளின் தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மான், சூசை, போன்றவர்களும் கொல்லப்பட்டதாக அறிக்கை பதிவு செய்கிறது. 2009 மே 18 ஆம் திகதி ஒரு நாளில் மட்டும் 1000-4000 பேர் வரை கொல்லப்பட்டதாகவும், அறிக்கை பதிவு செய்கிறது.

ராஜீவ்காந்தியின் மரணத்தில் தாம் தொடர்புபடவில்லை என முன்னர் தன்னிடம் தெரிவித்த புலிகள் தலைவர் பிரபாகரனும், உளவுத்துறைத் தலைவர் பொட்டம்மானும் பின்னாளில் தமது தொடர்பை ஒப்புக்கொண்டு தன்னிடம் தெரிவித்ததாக அன்ரன் பாலசிங்கம் தன்னிடம் தெரிவித்ததாக எரிக் சொல்ஹெய்ம் சொன்ன விடயத்தையும் இந்த அறிக்கை பதிவு செய்கிறது. இலங்கை அரசிடமும் புலிகளிடமும் முனைப்புப் பெற்றிருந்த போர்ச் சிந்தனையில், ஏலவே ஓரநிலைக்குத் தள்ளப்பட்ட(marginalised) அன்ரன் பாலசிங்கத்தின் மரணம் என்பது பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதில் மிகப்பெரும் பின்னடைவாக இருந்தது என்பதனையும் இந்த அறிக்கை பதிவு செய்கிறது.



சுலோவோக்கியாவில் நடைபெற்ற கண்காட்சி ரென்னிஸ் போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்ற டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, பிரான்ஸ் ஜாம்பவான் ஹென்றி லெகோன்டியின் மடியில் ஆனந்தமாக அமர்ந்திருப்பதைக் காணலாம்.

# மீண்டும் பிரிந்தது ஜோடி



(சென்னை)

இந்தியாவின் லியாண்டர் பயஸ், மகேஷ் பூபதி ஜோடி மீண்டும் பிரியப் போவது உறுதியாகியுள்ளது.

அடுத்த ஆண்டு முதல் போட்டியான சென்னை ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இவர்கள் இருவரும் வெவ்வேறு வீரர்களுடன் இணைந்து விளையாட உள்ளனர்.

மகேஷ் பூபதி மற்றொரு இந்திய வீரரான ரோகன் போபண்ணாவுடனும், பயஸ் செக் குடியரசின் ரேடக் ஸ்டெபானெக்குடன் இணைந்தும் களமிறங்கியுள்ளதாக தமிழ்நாடு ரென்னிஸ் சங்க தலைவர் அழகப்பன் தெரிவித்தார்.

கருத்து வேறுபாடு காரணமாக 2002இல் பிரிந்த பயஸ்-பூபதி ஜோடி 9 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் 2011ஆம் ஆண்டு இணைந்தது. இதைத்தொடர்ந்து சென்னை ஓப்பன் போட்டியில் களமிறங்கிய இந்த ஜோடி அபாரமாக விளையாடி முன்னணி வீரர்களை வீழ்த்தி ஆடவர் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் சவாரிப் போட்டி மட்டக்களப்பில் ஆரம்பம்

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இளைஞர் சைக்கிள் சவாரி அடுத்த மாதம் 08 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு நகரிலிருந்து ஆரம்பிக்கப்படும் இச் சைக்கிள் சவாரி அம்பாறை, சியம்பலாந்துவ, மொனராகலை, அம்பாந்தோட்டை ஊடாகச் சென்று மாத்தறை நகரை வந்தடைவதுடன் அங்கு பல்வேறு வைபவங்களுக்கு மத்தியில் இறுதி நாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

மட்டக்களப்பு நகரில் எதிர்வரும் 08 ஆம் திகதி ஆரம்பமாகும். இச் சைக்கிள் சவாரி 10 ஆம் திகதி வரை இடம் பெறவிருப்பதுடன் இதனையிட்டு ஒவ்வொரு இரவிலும் விசேட இசை நிகழ்ச்சிகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும், பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி லலித் பியூம் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு, கிழக்குப் பகுதியில் இடம் பெறும் முதலாவது சைக்கிள் சவாரியை தேசிய இள்ளஞர் சேவைகள் மன்றம் ஏற்பாடு செய்துள்ளது என்றும் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் இருந்து அதிகளவான இளைஞர்கள் பங்கேற்க வுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

சமாதானச் சூழலில் இவ் வகையான போட்டிகள் இடம் பெறுவது தமிழ் - சிங்கள மொழி பேசும் இளைஞர்களுக்கு மற்றுமொரு உந்துதலை, தைரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


# கிரிக்கெட் உறுப்பினர் தெரிவு நேற்று முதல் வேட்பு மனு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் உறுப்பினர் தெரிவிற்கான வேட்பு மனுக் கள் நேற்று முதல் 14 நாட்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

விளையாட்டுத்துறைச் சட்டத்தின் (40) 'ஏ' பிரிவின் பிரகாரம் விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் நாயகத்தினால் வேட்பு மனுக்கள் கோரப்படுவதுடன், வேட்பு மனுக்கள் கோரி 30 நாட்கள் கடந்ததன் பின்னர் அதாவது 2011 எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் உறுப்பினர் தெரிவு இடம்பெறுமென விளையாட்டுத்துறை அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

விளையாட்டுத்துறைச் சட்டத்தின் கீழ் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் கிரிக்கெட் இடைக்கால நிர்வாகக் குழு கடந்த 15ஆம் திகதி கலைக்கப்பட்டது. அதன் பின்னர் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்குப் பொறுப்பான தற்காலிக அதிகாரியாக விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் உதய ஆர். செனவிரத்ன நியமிக்கப்பட்ட விளையாட்டுத் துறைச் சட்டத்தின் (40) 'ஏ' பிரிவின் பிரகாரம் கிரிக்கெட் உறுப்பினர் தெரிவிற்கான பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தராக விளை யாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகேவினால் விளையாட்டுத்துறை பணிப்பாளர் நாயகம் ரஞ்ஜனீ ஜயகொடி நியமிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சு தெரி விக்கின்றது. இந்தத் தெரிவுகள் மூலம் சிறந்த கிரிக்கெட் நிர்வாகம் இலங்கையில் இடம்பெறும் எனவும் தெரிவித்தது.



கொலம்பியாவில் நடந்த கண்காட்சி ரென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ் சக வீராங்கனை செரீனாவை வீழ்த்தினார். பட்டம் வென்ற உற்சாகத்தில் வில்லியம்ஸ் சகோதரிகள் சந்தோசத்தை வெளிப்படுத்து வதைக் காணலாம்.

# நடால் வெளியேற்றம்

(லண்டன்)

உலகின் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் ஏ.டி.பி. உலக ரென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்று வருகிறது. உலகின் இரண்டாம் நிலை வீரரான ரபெல் நடால் (ஸ்பெயின்) இந்தப் போட்டியில் அதிர்ச்சிகரமாக வெளியேற்றப்பட்டார்.

'பி' பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் நடால் 6ஆம் நிலை வீரரான வில்பிரைட் டிசோங்காவை (பிரான்ஸ்) எதிர்கொண்டார். இதில் யாருமே எதிர்பார்க்காத வகையில் நடால் 6-7 (2-7), 6-4, 3-6 என்ற செட் கணக்கில் தோற்றார். அவர் ஏற்கனவே பெடரரிடம் தோற்று இருந்தார்.

2 தோல்வி மூலம் நடால் அரையிறுதி வாய்ப்பை இழந்து போட்டியில் இருந்து வெளியேற்றப்பட்டார். அவர் மார்டி பிஷ்ஷை (அமெரிக்கா) மட்டுமே வென்று இருந்தார். 'பி' பிரிவில் இருந்து பெடரர், டிசோங்கா அரையிறுதிக்கு நுழைந்தனர்.

# கிரிக்கெட்டே என் மூச்சு




(புதுடில்லி)

இன்னும் 5 முதல் 6 வருடங்கள் என்னால் கிரிக்கெட் விளையாட முடியும் என்று நினைக்கிறேன். இன்னும் என்னால் அணிக்கு பங்களிப்பை அளிக்க முடியும் என்று கருதுகிறேன். கிரிக்கெட்டை தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது. கிரிக்கெட் ஆட்டம் தான் எனது மூச்சாகும் என ஹர்பஜன்சிங் தெரிவித்துள்ளார்.

அணியில் இடம் பிடிப்பதில் போட்டி நிலவுவது அணிக்கு நல்லதாகும். போட்டியைக் கண்டு நான் பயப்படவில்லை. போட்டியைக் கண்டு அஞ்சுபவனாக நான் இருந்திருந்தால் 13 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடி இருக்க முடியாது. போட்டி இல்லாவிட்டால் ஆட்டத்தின் தரம் உயராது. புதிய சுழற்பந்து வீச்சாளர்கள் நீண்ட நாட்கள் விளையாடி முன்னேற்றம் கண்டால் அது அணிக்கு நல்லதாகும். புதிய வீரர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# சமனிலையை நோக்கி மும்பை டெஸ்ட்

## அஷ்வின் கன்னிச் சதம்



(மும்பை)

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மும்பை டெஸ்ட் போட்டி சமனிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி மும்பையில் நடைபெற்று வருகின்றது. மூன்று விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தை இந்திய அணி தொடர்ந்து. மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் களமிறங்கிய சச்சின் 94 ஓட்டங்களைப் பெற்ற வேளை ஆட்டமிழந்து ஆறு ஓட்டங்களால் சதத்தை கைநழுவவிட்டார். பின்னர் இந்திய அணியின் விக்கெட்டுக்கள் விரைவாக வீழ்த்தப்பட்டபோதும், ஹோலி, அஷ்வின் இணை மிகச் சிறப்பான இணைப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. இறுதியில் இந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஷ்வின் கன்னிச் சதம் (103) பெற்றார். ஹோலி 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ராம்போல், சாமுவேல்ஸ் மூன்று, சமி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

108 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸை ஆடிவரும் மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறுத்தப்பட்டவேளை இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆடுகளத்தில் டரன் பிராவோ 27, பரத்வைட்ற் 34 ஓட்டங்களுடனும் உள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ஓஜா கைப்பற்றினார். எட்டு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 189 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது.

# ரசிகர்களின் கனவை சிதைப்பதே இலக்கு



(மும்பை)

டெண்டுல்கர் இமாலய சாதனையின் விளிம்பில் இருக்கலாம். ஆனால் அதனை தடுத்து நிறுத்தி ரசிகர்களின் கனவைச் சிதைப்பதே எங்களது இலக்கு என்று மேற்கிந்தியத்தீவு அணிக் கப்டன் டரன் சமி தெரிவித்தார்.

மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவடைந்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே டரன் சமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டெண்டுல்கர் 67 ஓட்டங்களுடன் களத்தில் இருப்பதால், நான்காம் நாள் ஆட்டம் மைதானத்தில் ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழியும் என்று எதிர்பார்க்கிறேன். அதே சமயம் இந்திய ரசிகர்களின் இதயங்களை நொறுக்க எங்களுக்கும் வாய்ப்பு உள்ளது. இது 4ஆவது நாளில் சுவாரஸ்யமானதாக இருக்கும் எனவும் தெரிவித்தார்.

# வரவு-செலவுத்திட்ட வாசிப்பின்போது எதிர்க்கட்சியினர் தாக்கப்பட்டுள்ளனர்



## பொதுநலவாய நாடாளுமன்ற சங்கத்திற்கு ரணில் கடிதம்

(கொழும்பு)

வரவு செலவுத் திட்டம் வாசிக்கப்படுகையில் எதிர்த்தரப்பினர் தாக்கப்பட்டனர் என ரணில விக்ரமசிங்க பொதுநலவாய நாடுகளின் நாடாளுமன்ற சங்கத்தின் பொதுச் செயலாளர் காலாநிதி விலியம் எப்.ஷிஜாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து விளக்கும் வகையில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில்,

வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நாளில் வெளிப்புற நுழைவாயிலில் பாதுகாப்புத் தரப்பினர்களைப் பயன்படுத்தி எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சோதனைக்கு உட்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது. இதன்போது அவர்களிடம் இருந்த ஆவணங்கள் சில கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட எந்தவொரு ஆவணமும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையவில்லை. வரவு செலவுத் திட்டம் வாசிக்கப்படும் போது எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தாக்கியதாகவும் அவர் அதில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பாரிய வாழைச் செய்கைத் திட்டத்தை கைவிட்டது அமெரிக்கா

அமெரிக்க நிறுவனமொன்று இலங்கையில் மேற்கொள்ளவிருந்த பாரிய பயிர்ச்செய்கைத் திட்டத்தை சூழலியலாளர்களின் போராட்டத்தை அடுத்து கைவிட்டுள்ளது. இலங்கையில் உள்ள சோமாவதி தேசியப் பூங்காவில் அமெரிக்காவின் டோல் என்ற நிறுவனம், பாரியளவில் வாழைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவிருந்தது.

இதற்காக பாரிய முதலீட்டையும் அந்த நிறுவனம் மேற்கொள்ளவிருந்தது. எனினும் இந்த முதலீடு காரணமாக யானைகள் மற்றும் ஏனைய இயற்கைப் பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சூழலியலாளர்கள் சுட்டிக்காட்டியிருந்ததையடுத்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

# முத்திரைகளுக்கு பெரும் தட்டுப்பாடு பல மில்லியன் வருமானம் இழப்பு

(கொழும்பு)

இலங்கை தபால் திணைக்களம் கடுமையான முத்திரைத் தட்டுப்பாட்டை எதிர்கொள்வதாகவும் இத்தட்டுப்பாட்டினால் திணைக்களத்துக்கு பல மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுவதாகவும் கூட்டிணைந்த தபால் ஊழியர்களின் சங்கம் நேற்றுமுன்தினம் தெரிவித்தது.

50 சதம், 1 ரூபா, 2 ரூபா, 3 ரூபா, 12 ரூபா, 50 ரூபா, 100 ரூபா பெறுமதியான முத்திரைகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக சங்கத்தின் ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார கூறினார். தபால் முத்திரைகளை அச்சிடுவதிலுள்ள முட்டுக்கட்டைகளே இதற்குக் காரணம் எனத் தபால் சேகரிப்பாளர்கள் சமூகப் பணியக வட்டாரங்கள் தெரிவித்தன

தபால் திணைக்களத்துக்கு அதிக வருமாம் மூலமாக முத்திரைகள் உள்ளன. இந்நிலையில் முத்திரை தட்டுப்பாட்டினால் மில்லியன் கணக்கான ரூபா வருமான இழப்பு ஏற்படுகிறது என அவர கூறினார். இப்பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் நாம் மேலும் பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும் எனவும் அவர் தெரிவித்தார்.




## அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டம்

# எதிர்க்கட்சிகள் பேச்சுவார்த்தை

(கொழும்பு).

அரசாங்கத்திற்கு விரோதமான ஆர்ப்பாட்டங்களை நாடு பூராகவும் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் மத்தியில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சரத் பென்சேகாவை விடுதலை செய்தல், அரச நிறுவனங்களை சுவீகரிப்பதை தடுத்தல், மக்களுக்கான சலுகை, ஜனநாயகம் சட்டம் மற்றும் சமாதானம் ஆகிய பொதுவான விடயங்கள் தொடர்பில் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான பொதுவான வரையறைகள் பற்றி அந்தப் பேச்சுவார்த்தைகளின் போது ஒரு இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பேரில் ஐ.தே.க.வின் சார்பில் ரவி கருணாநாயக்க மற்றும் மங்கள சமரவீர ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் கலந்து கொள்ளவுள்ளோர் தொடர்பில் இதுவரை தகவல் வெளியாகவில்லை.

# மக்களுடைய தேவைகள் கருத்திற்கொள்ளப்படவில்லை



(கொழும்பு)

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில், மக்களின் தேவைகள் தொடர்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை என ஐக்கிய தேசிய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான விக்ரமரத்ன இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், அரசாங்கம் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். வரவு செலவுத் திட்ட அறிக்கை சமர்ப்பித்தலின் போது, நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட முறுகல்நிலை தொடர்பிலும் அவர் இதன் போது தெளிவுபடுத்தினார்.

# துமிந்தவின் மருத்துவ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவு



(கொழும்பு)

கொலன்னாவவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டினால் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

துமிந்த சில்வா சார்பில் நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தாக்கல் செய்த நகர்த்தல் பிரேரணையொன்றை ஆராய்நத பின்னரே நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

குறித்த சம்பவத்தில் பாரத லஷ்மன் பிறேமசந்திர உள்ளிட்ட நான்கு பேர் உயிரிழந்ததாகவும் மேலும் சிலர் காயமடைந்ததாகவும் நகர்த்தல் பிரேரணையை தாக்கல் செய்த சட்டத்தரணி சுடடிக்காட்டினார். எனினும் விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் தொடர்பாக இதுவரை விசாரணை நடத்தவில்லை எனவும் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து துமிந்த சில்வா தொடர்பில் பல்வேறு வதந்திகள் பரவி வருவதால் அவருக்கு காயம் ஏற்பட்டவிதம் தொடர்பாக நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செயயப்பட வேண்டும் எனவும் சட்டத்தரணி கூறியுள்ளார்.

இந்த வாதங்களை கவனத்திற்கொண்ட கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன டி அல்விஸ் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். துமிந்த சில்வாவிற்கு சிகிச்சையளித்த சிறி ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளின் அறிக்கைகள் உள்ளிட்ட அனைத்து அறிக்கைகளையும் உள்ளடக்கிய அறிக்கையொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறும் அவர் தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

# 10 மீனவர்கள் கைது


(கொழும்பு)

கடல் எல்லையை சட்ட விரோதமாக மீறிய இலங்கையின் 10 மீனவர்கள் தமிழகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தற்போது காசிமேடு காவற்துறையில் கையளிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து 600 கிலோ கிராம் மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஆந்திரபிரதேசத்தின், மாசிலிபட்டனத்தில் இருந்து 126 கடல் மைல்களுக்கு அப்பால் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளையில் அவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அலரிமாளிகையில் டிசெம்பர் முதலாம் திகதி

# காணியற்ற 5000 குடும்பங்களுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்கல்




(கொழும்பு)

சொந்தக் காணிகள் இல்லாத மேலும் ஐயாயிரம் குடும்பங்களுக்கு காணிகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பிலான நிகழ்வு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

காணி வசதிகள் இன்றி வாழ்ந்துவந்த ஐயாயிரம் குடும்பங்கள் இதற்காக நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவர்களில் காணிகளுக்கான சட்டபூர்வ ஆவணங்கள் இல்லாதிருந்தவர்களும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது. இதனைத் தவிர பல்வேறு அபிவிருத்திப் பணிகளுக்காக வழங்கப்பட்டிருந்த அரச காணிகளில் நீண்டகாலம் வாழ்ந்துவந்தவர்களுகும் காணி உறுதிப்பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உண்ணாவிரதம் இருப்பதற்கு முயற்சி செய்த பொன்சேகா



(கொழும்பு)

சிகிச்சை பெறுவதற்காக வாய்ப்பளிக்கப்படாமை தொடர்பாக முன்னாள் இராணுவ தளபதி சரத் பொன்சேகா கடந்த புதன் கிழமை தான் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலையின் அறையில் வைத்து உண்ணாவிரதம் ஒன்றை ஆரம்பிக்கவிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயினும் இது பற்றி சிறைச்சாலை ஆணையாளருக்குத் தெரிய வந்ததையடுத்து அவர் உடனடியாக சரத் பொன்சேகாவை சந்தித்து, சிகிச்சை அளிப்பதற்கு அழைத்து செல்லாமைக்கான காரணத்தை விளக்கியதை அடுத்து உண்ணாவிரதம் மேற்கொள்ளும் முடிவை சரத்பொன்சேகா கைவிட்டுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றது.

நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்படி சரத் பென்சேகாவை வைத்திய சிகிச்சைக்காக நவலோக்க வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லாமையே, அவர் உண்ணாவிரதம் ஆரம்பிக்க தீர்மானிப்பதற்கு காரணமாக இருந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளைக்கொடி விவகார வழக்கின்போது சட்டத்தரணிகளின் வேண்டுகோளின்படி சரத் பொன்சேகாவுக்கு சிகிச்சை அளிப்பதற்கு நவலோக்க வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தற்போது அந்த வழக்கு முடிவுற்று தீர்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. வெள்ளைக்கொடி விவகார வழக்கு முடிவுடைந்துள்ளதால் தொடர்ந்தும் சிகிச்சை அளிப்பதற்காக அழைத்துச் செல்ல வேண்டுமாயின் சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட வேண்டும் என்று சிறைச்சாலை அதிகாரிகள் சரத் பொன்சேகாவிடம் தெரிவித்துள்ளனர்.

# ஹெட்ஜிங் உடன்பாட்டு வழக்குக்காக 14 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஹெட்ஜிங் உடன்படிக்கை வழக்கு தொடர்பில் 14 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது. இது வெளிநாட்டுக்கு செல்லும் பயணப்பணமாக மாத்திரம் செலவிடப்பட்ட தொகையாகும் என்று இலங்கையின் எரிபொருள்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். இலங்கையின் எரிபொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தும் முகமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வெளிநாட்டு வங்கிகளுடன் ஹெட்ஜிங் உடன்படிக்கைகளை செய்துகொண்டது.

எனினும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிழையான அணுகுமுறை காரணமாக நட்டம் ஏற்படவே குறித்த வெளிநாட்டு வங்கிகளுக்கு பாரிய நிதிகளை பெற்றோலிய கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டியேற்பட்டது.எனினும் நட்டத்தை காரணம் காட்டி பணம் செலுத்தலில் தாமதத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கடைபபிடித்ததன் காரணமாக குறித்த வங்கிகள் வழக்குகளைப் பதிவு செய்தன. இந்தநிலையில் குறித்த வழக்குகளுக்குச் சென்று வருவதற்காகவே 14 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரேம்ஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இந்த உடன்படிக்கை தொடர்பில் சிங்கப்பூரின் சிட்டி வங்கிக்கு 6,081,722.50 ரூபாவும் ஐக்கிய இராச்சியத்தின் ஸ்டேன்ட்டர்ட் வங்கிக்கு 7,810,671 ரூபாவும் செலவிடப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

# சுயதொழில் முயற்சியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வரவுசெலவுத் திட்டம்

## யாழ்.மாநகர சபை உறுப்பினர் விஜயகாந்

(யாழ்ப்பாணம்)

சவால்கள் நிறைந்த எதிர்காலம் என்பதையே வரவு செலவுத்திட்டம் காட்டுகிறது என யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ்.விஜயகாந் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமானது அக்கறைக்குரிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது.


குறிப்பாக சம்பள அதிகரிப்பு, ஓய்வூதிய அதிகரிப்பு, பத்திரிகையாளர்கள், கலைஞர்களுக்குச் சலுகைகள் மற்றும் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கான முன்மொழிவுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

கடந்த காலத்தை விடவும் நல்ல பல திட்டங்களைக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் அறிவிப்புக்கள் வரவேற்கக் கூடியதாகும். எது எவ்வாறாக இருந்தாலும் முன்மொழியப்பட்ட திட்டங்களும், சலுகைகளும் மக்கள் அனுபவிக்கும் பயனுடையதாக நடைமுறைக்கு வரவேண்டும்.

சாதாரண மக்களின் வறுமையைப் போக்குகின்ற வாய்ப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும். பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தாலும் தற்போதைய சூழலில் முன்வைக்கக்கூடிய அம்சங்களை உள்ளடக்கியதான வரவு செலவுத்திட்டமாகவே இதைப் பார்க்கின்றேன்.

சவால்கள் நிறைந்த எதிர்காலத்தில் எல்லாமே சலுகைகளாகவும் உதவிகளாகவும் கிடைக்க வேண்டுமென எவரும் முழுமையாக எதிர்பார்க்க முடியாது. பொருளாதார சவால்களை எதிர்கொண்டு வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டிய தேவை உள்ளது என்பதையே இந்த வரவு செலவுத் திட்டம் சுட்டிக்காட்டுகின்றது என அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

# உலக அஞ்சல் தினத்தில் மரக்கன்று நாட்டல்



உலக அஞ்சல் தினத்தையொட்டி கடந்த வாரம் ஆனைக்கோட்டை உபதபாலக ஊழியர்கள் மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை வளாகத்தில் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இதில் முதல் மரக்கன்றினை தபாலகப் பொறுப்பதிகாரி ஜானகி நித்தியானந்தன் நாட்டிவைத்தார்.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி, ஜானகி நித்தியானந்தன், வைத்தியசாலை ஊழியர்கள், அபிவிருத்திச் சபை தலைவர் மனோகரன், தபாலக ஊழியர்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (104)

# சன சமூக நிலையக் காணி தனியாருக்குச் சொந்தமானதா?

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதியில் உள்ள சிவசக்தி கோயிலுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இயங்கி வந்த சிவசக்தி சனசமூக நிலையத்தைத் தொடர்ந்து இயங்கிவிடாது சிலர் இடையூறுகளை ஏற்படுத்தி வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி இளைஞர்களதும், பெரியவர்களினதும் முயற்சியால் பொதுநோக்கு மனப்பாங்கினாலும் மக்களின் சேவை நலனைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சனசமூக நிலையத்தை காணிச் சொந்தக்காரர் எனக் கூறிக்கொள்ளும் சிலர் இயங்கவிடாது தடுத்து நிறுத்தியுள்ளனர். அத்துடன் அதன் முன்புற நுழைவாயில் புறமாக வேலி அமைத்து பாதையினையும் தடைசெய்துள்ளனர்.

இதனால் அப்பகுதி மக்கள் பெரும் விசனமடைந்துள்ளதுடன் அதனை மீள இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இச் சனசமூக நிலையம் மூடப்பட்டமையால் இந்நிலையத்திற்குச் சென்று பயனடைந்தவர்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். (03)


# மின் துண்டிக்கப்படும் நாட்களிலும் நேரத்தை கடைப்பிடிக்க வலியுறுத்து

(அச்சுவேலி)

வலிகாமம் கிழக்குப் பகுதியில் வீதித்திருத்த வேலைகளுக்காக மின்வெட்டு அமுல்படுத்தப்படும் நாட்களிலும் காலை வேலைகளில் உரிய நேரத்திற்கு மின்துண்டிப்பு இடம்பெறுவதாகவும், ஆனால் மாலை வேளையில் குறிப்பிட்ட நேரத்தைத் தாண்டிய சில மணித்தியாலங்களின் பின்னரே மின்சாரம் வழங்கப்பட்டுவருவதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மின்வெட்டு அமுலாகும் நாட்களில் வழமையாக 5 மணிக்கு மாலையில் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தபோதிலும் தற்போது நன்கு இருட்டிய பின்னரும் நேரதாமதத்துடனுமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் பொதுமக்களுக்குப் பல்வேறு சிரமங்கள் ஏற்படுவதனால் இந்நிலை மாற்றமடைய வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (03)



தேசிய உள்ளூராட்சி வாரக் கண்காட்சி வவுனியா நகர சபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி சபைகள் பங்குபற்றின. இதில் நவீன முறையில் வீடு மற்றும் பொருட்களைத் தயாரித்து காட்சிக்கு வைத்த வலி.தென்மேற்குப் பிரதேச சபை இரண்டாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது. (104)

# வீடுகளுக்குள் புகுந்தது வெள்ளம் மக்கள் இடம் பெயரும் அவலம்

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும கனமழை காரணமாக மக்களின் இயல்புநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் அவர்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அகலிப்பு மற்றும் காபர் வீதியமைக்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வந்த வீதிகளில் அப்பணிகள் தடைப்பட்டதோடு வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு மிக மோசமாக இவ்வீதிகள் சேதமடைந்துள்ளன.

அண்மையில் பெய்துவரும் மழைகாரணமாக யாழ்.நகரை அண்மித்த தாழ்நிலப் பிரதேசங்களான பொம்மைவெளி, காக்கைதீவு, நாவாந்துறை, கொட்டடி, ஓட்டுமடம் போன்ற பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. காக்கைதீவு, பொம்மைவெளிப் பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளதால் இப்பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதோடு தமது உடமைகளைப பாதுகாப்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதையும் காணமுடிகிறது.

முஸ்லிம் மக்கள் மீள்குடியமர்ந்துள்ள சோனகத் தெருவில் இருபதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மேற்படி பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் அன்றாடம் கடற்தொழில்களில் ஈடுபட்டு வருபவர்கள். கடந்த சில நாள்களாகப் பெய்துவரும் தொடர் மழை காரணமாக இவர்கள் தமது தொழில்களை இழந்து அன்றாட ஜீவனோபாயத் தேவைகளுக்குப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அரசாங்கமும், சமூக தொண்டு நிறுவனங்களும் மனிதாபிதானத்துடன் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வர வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (10)

# நிரம்பி வழியும் நிலையில் வடிகால் சீரற்ற குளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி வீதியிலுள்ள பொம்மைவெளிப் பிரசவ விடுதி அருகிலுள்ள குளம் நிரம்பியுள்ளது.

கடந்த வாரமாகப் பெய்துவரும் மழையினால் இக்குளம் நிரம்பி வழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் உள்ள வடிகால் மூலம் வெளிச்செல்லும் நீர் குளத்திற்குள் செல்ல முடியாமல் காணப்படுகின்றன.

குடிமக்கள் அதிகமாகவுள்ள இப்பிரதேசத்தில் தொற்று நோய்கள் வெகுவிரைவாகப் பரவக் கூடிய நிலையே காணப்படுகின்றன.

தற்போது பெய்துவரும் மழையினால் வடிகால்களும் நிரம்பி அதன் அழுக்கு நீர்கள் வீடுகளுக்குள் செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளன.

இதனால் டெங்கு, மலேரியா போன்ற ஆட்கொல்லி நோயகள் ஏற்படுத்தும் நுளம்பு, கிருமிகள் பெருகிக் காணப்படுகின்றன. உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (105)

# ஊழியர்களுக்கான சேமலாப நிதிப் பதிவுகள்

(வவுனியா)

வவுனியாவில் நேற்றுமுன்தினமும், நேற்றும் வவுனியா தொழில் திணைக்களத்தில் ஊழியர்களுக்கான சேமலாப நிதிப் பதிவுகள் இடம்பெற்றது.

இந்தப் பதிவுகள் மோசடிகளைத் தடுப்பதற்காகவும் ஊழியர்களுக்கு சேமலாப நிதி பற்றி எடுத்துரைக்கவும் சேமலாப நிதியின் வரைமுறைகள் பற்றியும் தெரியப்படுத்துவதற்காகவும் இப்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அடையாள அட்டை இலக்கம், கைவிரல் அடையாளம் போன்றவை எடுக்கப்பட்டதுடன், இலவசப் புகைப்பட சேவையும் வழங்கப்பட்டது.

இந்தப் பதிவின்போது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த பல ஊழியர்கள் கலந்துகொண்டனர். (125)

# உள்நாட்டு ஆண்கள், பெண்கள் தோன்றும் ஆபாச இணையங்களை தடுக்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு ஆண்கள் மற்றும் பெண்கள் தோன்றும் ஆபாச இணையத் தளங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்காக இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு அணி மற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் உதவியை பொலிஸார் நாடியுள்ளதாக பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பணியகம் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ஆபாச இணையத்தளங்கள் பலவற்றை இலங்கை தடை செய்த போதிலும் இத்தகைய இணையத்தளங்களை இயக்குபவர்கள் பெரும்பாலும் வெளிநாடுகளில் இருந்து செயற்படுவதால் அவர்களைக் கண்டறிவதற்கான தொழில்நுட்பம் அவ் வாணைக்குழுவிடம் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனால் தான் இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு அணி மற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் உதவியை நாடியுள்ளதாக பொலிஸ் பெண்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புப் பணியகம் தெரிவித்துள்ளனர்.



# கொலைக் கருவியாகும் அறிவு!

நாமும் மேலை நாட்டினரின் தொழில்நுட்பப் பார்வையை அறிவியல் சார்ந்தது என்ற பிரமிப்பில் கேள்விகேட்காது ஏற்றுக் கொண்டு விட்டோம். இந்தப் பார்வை நம் சூழலிலிருந்து நம்மைப் பிரித்து, சூழலை நம் தேவைகளுக்குத் தக்க வகையில் ஆண்டனுபவிகக உதவும் குறைப் பார்வைதான் என்ற பிரக்ஞை நம்மிடம் இல்லை.




அதுதான் போதாதென்றால் அதனால் ஏற்படும் கேடுகளைக் கூட அவர்களின் மொழியிலேயே எதிரொலிக்கிறோம்.

எத்தனையோ விஷயங்களை சுட்டலாம். ஏன் என்று எதுவும் கேட்காமல் நாம் மேலை நாட்டின் தொழில் நுட்பப் பார்வையை கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்வதும், அதில் உள்ள ஆபத்துகளை அவர்கள் கண்டறிந்த பின்னரே நாம் விழித்துக் கொள்வதும் அனைத்து துறைகளிலும் நடைபெறும் ஒன்றே. மருத்துவம், விவசாயம் குறித்த நம் பாரம்பரிய அறிவு இன்று தினமும் மறக்கப்பட்டு வருகிற ஒன்றாகி வருகிறது. அவை ஆவணப்படுத்தப்படுகின்றன என்றாலும் அதன் பின்னணியில் நமக்கு நம் பாரம்பரியம் குறித்த புரிதலோ பெருமையோ இல்லை என்பது கண்கூடு. அப்படி ஒன்று இருந்திருப்பின் நாம் அவற்றைப் புறம் போக விடமாட்டோம்.

ஒரு குறிப்பிட்ட சூழியல் அதில் இருப்பவர்களை உள்ளடககிய ஒன்று. தங்கள் சூழியலை ஒட்டி அதை மட்டும் அறிந்து வாழ்பவர்களின் புரிதலில் ஏராளமான குறைகள் இருக்கலாம். அறிவியல்-தொழில் நுட்ப அறிவின் அடிப்படையில் நிகழ்த்துகிற புரிதல் பெரும்பாலும் சரியானதாகவே இருக்கலாம். இருப்பினும், தாங்களே இருந்து அனுபவிப் பவர்கள் என்ற வகையில் பாரம்பரிய அறிவு என்பது, தொழில் நுட்ப அறிவை விட சூழியலில் குறைவான சிதைவுகளையே உண்டாக்கக் கூடும். மலைகளின் வளங்களை பெருமளவுக்கு ஈட்டி அவற்றை வாழ்வதற்கில்லாத பொட்டல் வெளிகளாய் மாற்றுவதென்பது அந்த சூழியலுக்கு அந்நியனாய், அதனோடு ஒட்டுறவில்லாத வாசிப்பைப் பழகிய ஒருவனால்தான் இயலும். நாம் அனைவரும் அத்தகையவர்களாக மாறி வருகிறோம்.

மனிதன் தன் சூழியலை ஒட்டி வாழப் பிறந்தவன்- அதை நீங்கி அவனால் நலமாக வாழ முடியாது என்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். எப்படி வன விலங்குகள் ஒன்றை ஒன்று சார்நது இருக்கின்றனவோ, அப்படியே உடலளவில் கூட மனிதனுக்கு கிருமிகளும், புழுக்களும்கூட அவனது ஆரோக்கியத்துக்கு அவசியமாக இருக்கிறது என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள். பரிணாம வளர்ச்சியில் மனிதன் இவற்றின் துணையோடுதான் வளர்ந்திருக்கிறான், இன்று ஆரோக்கியம் என்ற புரிதலில் தூய சுகாதாரச் சூழலை அவன் தன்னைச் சுற்றிக் கட்டமைக்கத் துவங்கிய காரணத்தால்தான் மேலை நாடுகளில் வளரும் நாடுகளை விட அதிக அளவில் ஆஸ்த்மா, அலர்ஜி, ரூமோட்டாய்ட் ஆர்த்ரிடிஸ் போன்ற auto immune நோய்கள் பெருமளவில் அதிகரித்து காணப்படுகின்றனவா என்ற கேள்வி குறித்து மருத்துவ ஆய்வுகளும் நடைபெற்று வருகின்றன. இவ் வகை நோய்களை குணப்படுத்திக் கொள்ளவேண்டி அமெரிக்காவில் இருந்து காமரூன் போன்ற சுகாதார வசதி இல்லாத நாடுகளின் மலக்குழிகளில் வெறுங்காலோடு நடந்து புழுக்களைத் தம் உடலில் தருவித்துக் கொள்கிறவர்களும் இருக்கிறார்கள் என்ற விபரீதமான செய்தி கூட கிடைக்கிறது. இந்த விஷயத்தின் உண்மை எவ்வளவு என்று தெரியவில்லை- இந்தக் கோட்பாடுகூட அறிவியல் பார்வையில் நிரூபணமாகி நிலை நிறுத்தப்படுமா என்று தெரியவில்லை. ஆனால் தன் உடலின் சூழியலில் கிருமிகள் முதற்கொணடு புழுக்கள் வரை பல உயிரிகளின் தயவால்தான் மனிதன் வாழ்கிறான் என்ற செய்தி சூழியல் குறித்த பார்வையின் அவசியத்தை நினைவுறுத்துவதாகவேயுள்ளது.

சூழியலிலிருந்து கூறுபட்ட, அதை எதிர்க்கும் நோக்கமே கொண்ட, லாபத்துக்கு மனித நலத்தைக் காவு கொடுக்கத் தயங்காத தொழில்நுட்பம் அனைதது விடைகளையும் தந்து விடாது. அதிலும், எந்தக் கேள்விக்கும் இடம் தராமல் மாற்றுப் பார்வைகளை மிரட்டி ஒடுக்கும் ஒற்றைப் பார்வை "அறிவியல்" என்ற பிரமையோடு கை கோர்த்துக் கொண்டு செயற்படும் போது அது அனைத்தையும் அழித்து, தனக்கும் அழிவு தேடித் தரும் கொலைக் கருவியாகவே மாறி விடுகிறது. - *மித்திலன்*



# ஓர் எலியைக் கொன்றுவிடுதல்

எதிர்காலத்தை மாற்ற விரும்பவில்லை. இந்த உலகின் கடந்த காலமும் நமக்குச் சொந்தமில்லை. நாம் இங்கிருப்பதை அரசாங்கம் விரும்பவில்லை. நமது தொழிலைத் தொடர அதிக இலஞ்சம்கொடுக்க வேண்டியுள்ளது. கால எந்திரம் மிக நுணுக்கமாக கையாள வேண்டிய விஷயமாகும். நமக்குத் தெரியாமலே ஒரு விலங்கை, ஒரு பறவையை, ஒரு மீனை...ஏன் ஒரு மலரை நாம் கொன்று விடுவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் வளர்ந்து வரும் ஓர் உயிரினத்தின் வம்சாவளியை அழித்து விடுவதற்கான வாய்ப்பும் உள்ளது'

"எனக்குப் புரியவில்லை" என்றான் எக்கல்ஸ்.

"இதோ பார், தவறுதலாக ஒரு எலியைக் கொன்று விடுகிறோம் எனறு வைத்துக்கொள். அப்படியென்றால் அந்த ஒரு எலியின் எதிர கால சந்ததிகள் அனைத்தையும் நாம் அழித்து விட்டதாகத்தானே அர்த்தம்"

"சரி"

'அந்த ஒரு எலியின் எதிர்கால சந்ததியினரின் எதிர்கால சந்ததியினர் அனைவரும் அழிந்து போவர். உன்னுடைய ஒரு தவறால் முதலில் ஒரு எலி, பின்னர் ஒரு டசின், பிறகு ஆயிரம, ஒரு மில்லியன், ஒரு பில்லியன் எலிகள் அழியும் வாய்ப்பு உள்ளது'

"எலிகள் செத்தால் என்ன?" என்றான் எக்கல்ஸ்.

'எலிகள் செத்தால் என்னவா? எலிகளை நம்பியிருக்கும் நரிகளின் கதி என்ன? 10 எலிகள் இறந்தால் அதை நம்பியிருக்கும் ஒரு நரியின் பிழைப்பு என்னாவது? 10 நரிகள் இறந்தால் ஒரு சிங்கம் பசியால் வாடாதா? ஒரு சிங்கத்தை நம்பியிருக்கும் புழுப பூச்சிகள், கழுகுகள், கோடிக்கணக்கான உயிரினங்கள் அழிந்து போகாதா? 59 மில்லியன் ஆண்டுகளுக்குப் பிறகு வேட்டைக்குப் புறப்படும் குகை மனிதனை பற்றி நினைத்துப் பார். உன்னுடைய சிறு தவறால் இந்தப் பகுதியில் எந்த விலங்கும் இருக்காது. குகை மனிதனுக்கு உணவு கிடைக்காது. அவன் இறந்தால் என்னவென்று அலட்சியமாக இருந்துவிட முடியாது. அவனிடமிருந்துதான் எதிர்கால தேசமே தோன்றவுள்ளது. அவனிடமிருந்து 10 பிள்ளைகள் தோன்றுவர். அவர்களிடமிருந்து 100 பிள்ளைகள் தோன்றுவர். ஒரு சமுதாயமே உருவாகும். இந்த ஒரு மனிதனை அழிப்பது ஓர் இனத்தையே, ஒரு வரலாற்றையே அழிப்பதற்கு சமம். இவனைக் கொல்வது ஆதாமின் பேரப்பிள்ளைகளில் ஒருவனைக் கொல்வதற்கு சமமாகும். ஒரு எலியைக் கொல்வதன் மூலம் இந்த பூமியையும் அதன் எதிர்காலத்தையும் அசைத்துப் பார்க்கும் ஒரு பூகம்பத்தையே நீ தொடங்கி வைக்கிறாய். ஒரு குகைமனிதனின் இறப்பின் மூலம் கோடிக்கணக்கான அவனது சந்ததிகள் கருவிலே கொல்லப்படுகிறார்கள். ரோமப் பேரரசு தோன்றாமல் போகலாம். ஐரோப்பா ஒரு இருண்ட காடாகவே நிலைத்திருக்கும். ஆசியக் கண்டம் மட்டுமே நாகரீகமடைந்திருக்கும். ஒரு எலியின் மீது நீ வைக்கும் சிறு காலடி, பிரமிடுகளை நசுக்கி விடும். ஒரு எலியன் மீது நீ வைக்கும் காலடி கிராண்ட் கெய்ன் போல் கால ஓட்டத்தில் அழியாத மாபெரும் வடுவாக நிலைத்து விடும். குயின் எலிசபெத் எப்போதும் பிறந்திருக்கமாட்டார். டெலாவர் நதியை வோஷிங்டன் கடந்திருக்காது. அமெரிக்கா தோன்றியிருக்காது. எனவே எச்சரிக்கையாயிரு. பாதையோடு ஒட்டி நில் விலகி விடாதே.

**- Ray Bradbury** எழுதிய **A sound of Thunder** சிறுகதையின் ஒரு பகுதி.



# ஆரண்யகாண்டம்

நான் பல தமிழ்ப் படங்களைப் பற்றி சிலாகித்து எழுதியிருக்கிறேன். காதல் கொண்டேன், புதுப்பேட்டை, பருத்தி வீரன், சுப்ரமணியபுரம் என்று சில பெயர்கள் ஞாபகம் வருகிறது. ஆனால் நான் சிலாகித்த எல்லா தமிழ்ப் படங்களுமே தமிழ் சினிமாவுக்கு என்று இருக்கும் இலக்கணத்திலிருந்து இம்மி பிசகாமல் எடுக்கப்பட்டவையாகவே இருந்ததை நாம் மறந்து விடக் கூடாது. நாயகன், நாயகி, காதல், டூயட், நாயகியின் பணககார அப்பா, வில்லன், காமெடியன், பாடல், சண்டை என பவை அந்த இலக்கணத்தின் முக்கியக் கூறுகள். ஆரண்ய காண்டத்தில் இந்த இலக்கணம் முற்றாக உடைக்கப்பட்டிருக்கிறது.

எனக்குப் பிடித்த, சர்வதேசத் தரத்தில் எடுக்கப்பட்ட தமிழ்ப் படங்களில் கூட செயற்கையான பாடல் காட்சிகள இருப்பதால் சர்வதேச சினிமா அரங்கில் இப்படங்கள் எடுபடாது என்று எழுதியிருக்கிறேன். சமீபத்திய உதாரணம், ஆடுகளம். ஆரண்ய காண்டத்தில் அப்படிப்பட்ட செயற்கையான ஒரு அம்சத்தைக் கூட பார்க்க முடியவில்லை. Babel என்ற அற்புதமான படத்தை இயக்கிய Alejandro Gonzalez Inarritu-வின் ஒரு படத்தைப் பார்ப்பது போன்ற அனுபவத்தை ஆரண்ய காண்டத்தில் உணர முடிந்தது.

இந்தப் படத்தை நியோ-ந்வார் (Neo-noir) வகை சினிமாவோடு சேர்ப்பதை என்னால் ஏற்க முடியவில்லை. வாழவின் இருண்ட (ந்வார் என்றால் கறுப்பு) பகுதிகளைச் சொல்வதால் இந்த வகைமையில் எடுக்கப்படும் படங்களை இப்படி கறுப்பு சினிமா என்று அழைக்கின்றனர். இப்படிப்பட்ட வகைப்படுத்துதல்களில் எனக்கு உடன்பாடு இல்லை. இலக்கியத்தில் பெண்ணிய இலக்கியம், தலித் இலக்கியம் என்று வகைப்படுத்துதலைப் போன்றதே இதுவும். மேன்மையானதொரு கலையனுபவத்தைக் கொடுக்கக் கூடிய படம் நல்ல சினிமா மற்றது கெட்ட சினிமா. இப்படித்தான் நாம் சினிமாவை வகைப்படுத்த முடியும்.

தமிழில் என் மதிப்புக்குரிய இயக்குனர்கள் மூவர். பாரதிராஜா, பாலு மகேந்திரா, மகேந்திரன். ஆனாலும், தமிழ் சினிமாவின் போக்கையே மாற்றியமைத்த இவர்களும் கூட தமிழ் சினிமாவின் இலக்கணத்துக்கு உட்பட்டே இயங்க வேண்டியிருந்தது. அதனால்தான் வங்காளம் மற்றும் மலையாள சினிமாவில் இருந்து பிரபலமான மிர்ணாள் சென், அடூர் கோபாலகிருஷ்ணன் அளவுக்கு இவர்களின் பெயர் சர்வதேச சினிமா அரங்கில் தெரியாமல் போனது. மேலே குறிப்பிட்ட வங்காள, மலையாள இயக்குனர்களுக்கு எந்த வகையிலும் குறையில்லாத இந்த மூவரையும் தமிழ் சினிமாவின் வணிக நிர்ப்பந்தங்கள் மூச்சு முட்டச் செய்தன என்றே சொல்ல வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில்தான் இன்று நல்ல சினிமாவை உருவாக்க வேண்டும் என்ற கனவுடன் வரும் இளம் இயக்குனர்கள் கூட சில சமரசங்களைச் செய்து கொளள வேண்டியிருக்கிறது. டூயட்டும், பாட்டும் இல்லாமல் படமே எடுக்க முடியாது, எடுத்தால் ஓடாது" என்ற ஒரு தவறான நம்பிக்கை இங்கே நிலவுகிறது. அந்த ஒரே காரணத்தினால்தான் ஈரானிய சினிமா உலக அரங்கில் பேசப்படும் அளவுக்குத் தமிழ் சினிமா பேசப்படாமல் போனது. இது வெறும் பாடல் என்ற ஒரு விஷயத்தை மட்டும் சார்ந்ததல்ல. தமிழ் சினிமாவுக்கென்று உருவாக்கி வைக்கப்பட்டிருக்கும் இலக்கணத்தை எப்படி உடைக்க முடியும் என்பது பற்றிய பிரச்சினை. அதை உடைக்க முதல்முதலாக முயற்சி செய்து அதில் வெற்றியும் அடைந்திருக்கிறார் இயக்குனர் தியாகராஜன் குமாரராஜா.

- சாரு நிவேதிதா

# ரஜினியின் புதிய 3டி படம் "கோச்சடையான்"



நடிகர் ரஜினிகாந்த் நடிக்கும் புதிய 3டி திரைப்படத்துக்கு "கோச்சடையான்" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை அவரது இளைய மகள் சௌந்தர்யா அஸ்வின் இயக்குகிறார்.

ஜேம்ஸ் கேமரூன் இயக்கத்தில் வெளியான "அவதார்", ஸ்டீவன் ஸ்பீல்பெர்க் இயக்கத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் "த அட்வென்ட்ச்சர்ஸ் ஒஃப் டின் டின்" போன்ற ஹொலிவுட் படங்களில் பயன்படுத்தப்பட்ட புதிய தொழில்நுட்பத்தில் "கோச்சடையான்" படம் உருவாக்கப்படுகிறது.

கே.எஸ். ரவிகுமார் கதை, திரைக்கதை, வசனம் எழுதி பட இயக்கத்தின் மேற்பார்வைக்கும் பொறுப்பேற்றிருக்கிறார். ரஜினியின் இளைய மகள் சௌந்தர்யா அஸ்வின் படத்தை இயக்குகிறார். படத்தின் வேலைகள் தொடங்கப்பட்டுவிட்டதாகவும் 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் படம் வெளிவரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


கி.பி. 710 ஆம் ஆண்டைச் சேர்ந்த மதுரையின் அரிகேசரி மாறவர்மன் என்ற பாண்டிய மன்னனின் வழித்தோன்றலான கோச்சடையான் ரணதீரன் என்ற மன்னன் வாழ்வில் நடைபெற்ற சம்பவங்களின் பின்னணியில் கற்பனை கலந்து "கோச்சடையான்" கதை உருவாக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இன்றும், மதுரையில் உள்ள ஒரு பகுதி "கோச்சடை" என்று அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

ரஜினியின் மகள் சௌந்தர்யா தயாரிப்பிலும் இயக்கத்திலும் "சுல்தான் - த வாரியர" என்ற அனிமேஷன் படம் 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. சரித்திரப் பின்னணியில் பெரும் பொருட்செலவில் உருவாக்கப்பட்ட அந்தப் படத்தின் பெரும்பாலான பகுதிகள் நிறைவடைந்து இறுதிக்கட்டப் பணி நடைபெற்று வந்தது. அதன் பிறகு இந்த அனிமேக்ஷன் படத்துக்கு "தீரா" எனப் பெயர் மாற்றம் செய்யப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகின.

அந்தப் படம்தான் புதிய தொழில்நுட்பத்துடன் 3டி வடிவில் "கோச்சடையான்" என்ற பெயரில் உருவாகிறது எனத் திரையுலக வட்டாரத்தில் கூறப்படுகிறது.

ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா, அவரது கணவர் தனுஷ் கமல்ஹாஸனின் மகள் ஸ்ருதி ஆகியோர் நடிக்கும் "3" என்ற படத்தை இயக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# ராமேஸ்வரம் மீனவர்கள் மீதுதான் தவறு!



தமிழ்நாட்டில் இலங்கை அரசை பெரிய வில்லனாகச் சித்தரிக்கும் போக்கு தமிழக அரசியல்வாதிகளிடம் நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. "இலங்கை எதிர்ப்பு" என்ற வியாதியினால் நீண்ட காலமாக இவர்கள் பீடிக்கப் பட்டிருக்கிறார்கள்.

இலங்கையில் தீவிரவாதம் ஓங்கியிருந்தவரை கருணாநிதி உட்பட பல தமிழக அரசியல்வாதிகளும் "இலங்கைத் தமிழர் துதி"யை உரத்தகுரலில் பாடிக் கொண்டு திரிந்தனர். பிரபாகரன் கொல்லப்பட்ட பின்பு, இந்த துதியின் கோரஸ் சத்தம் கொஞ்சம் அடங்கி விட்டது.

இப்போது தமிழக மீனவர்களைத் தாக்கும் இலங்கை கடற்படையையும், அதற்காக இலங்கை அரசையும் சாடுவதில் தமிழக அரசியல்வாதிகள் இறங்கியிருக்கிறார்கள். தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தாக்குவதை முதல்வர் கூட, "இந்திய இறையாண்மையைத் தாக்குவதாகக் கருத வேண்டும்" என்று உணர்ச்சி பொங்கக் கூறியிருக்கிறார். மீனவர்களை ஏன் தாக்குகிறார்கள் என்பது பற்றி யாரும் சிந்திப்பதில்லை.

இலங்கை கடற்படை ஒன்றும் சென்னை மீனவர்களையோ, புதுச்சேரி, கடலூர், தூத்துக்குடி, திருச்செந்தூர் பகுதி மீனவர்களையோ தாக்குவதில்லை. "நாகப்பட்டினத்துக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையிலுள்ள ஊர்களைச் சேர்ந்த மீனவர்களைத்தான் தாக்குகிறது. இந்தப் பகுதியிலேதான் இலங்கையின் கடல் எல்லை நமது நிலப் பகுதிக்குச் சமீபமாக வருகிறது.

நாகப்பட்டினம், இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் சென்று அத்துமீறி மீன் பிடித்து விட்டு, "எங்களை இலங்கை கடற்படை தாக்குகிறது, தாக்குகிறது" என்று கூறுகிறார்கள். இதற்கு கருணாநிதி, ஜெயலலிதா முதல் கொங்கு நாடு கட்சி வரை உள்ள சகல அரசியல்வாதிகளும் ஆதரவு தெரிவித்துப் பக்க வாத்தியம் வாசிக்கிறார்கள்.

இது சம்பந்தமாக தமிழக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு பொதுநல வழக்கில், தனது பதில் மனுவைத் தாக்கல் செய்த இந்திய கடலோரக்காவல்படை அதிகாரி மூர்த்தி, சில அடிப்படையான விஷயங்களைத் தனது பதில் மனுவில் கூறியிருக்கிறார்.

"உயர் நீதிமன்ற உத்தரவுக்குப் பிறகு இந்திய கடலோரக் காவல் படையின் ரோந்தும், ரோந்துப் படகுகளும் அதிகரிக்கப்பட்டுள் ளன. நாள் முழுவதும் ரோந்து நடக்கிறது. தமிழக மீனவர்களின் மீன்பிடிப் படகுகளில் வி.ஹெச்.எஃப். என்ற ரேடியோ சாதனம் இருந் தும், அதை அவர்கள் இலங் கைக் கடற்படையிடம் தாங்கள் சிக்கிக்கொண்டால், இந்தியக் கடலோரக் காவல் படையை அழைப்பதற்குப் பயன்படுத்துவதில்லை.

"இலங்கையில் சில வகையான வலைகளின் மீன் பிடிப் பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளன. அந்த வலைகளைத் தமிழக மீனவர்கள் பயன்படுத்தி இலங்கையின் கடல் பகுதிக்குள் சென்று மீன்பிடிக்கிறார்கள். "இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்தின் தகவலின்படி, கடந்த ஜூன் முதல் ஒக்டோபர் வரை 17,102 தமிழகப் படகுகள் இலங்கை கடல் பகுதிக்குள் சென்று மீன் பிடித்துள்ளன. ஒக்டோபர் 28 முதல் நவம்பர் 4 வரை மட்டும் 1482 மீன்பிடிப் படகுகள் எல்லை தாண்டிச் சென்று மீன் பிடித்துள்ளன" என்று இந்திய கடலோரக் காவல் படை அதிகாரி மூர்த்தி கூறியுள்ளார்.

நாகப்பட்டினம், இராமேஸ் வரம் பகுதி மீனவர்கள் இவ்வளவு தவறுகளை யும் காலம் காலமாகச் செய்து விட்டு, "இலங்கை கடற்படை துன்புறுத்து கிறது, இலங்கை கடற்படை அட்டூழியம் செய்கி றது" என்று சத்தம் போடு வதில் ஏதாவது நியாயம் உண்டா? இவர்களுக்கு ஆதரவாக சகல அரசியல் வாதிகளும் பேசுவது, மீனவர்க ளின் வாக்குகளைப் பெறுவதற் காகத் தான் என்பது எல்.கே.ஜி. படிக்கும் குழந்தைக்குக் கூடத் தெரியும்.

அதிகாரி மூர்த்தி தனது பதில் மனுவில், "குஜராத் அரசு தனது மாநிலத்தின் பக்கமுள்ள பாகிஸ் தான் கடற்பகுதியில் குஜராத் மீனவர்கள் மீன் பிடிப்பதைத் தடுக்க, ஐந்து கடல் மைல்களுக்குள் மீன் பிடிக்கக் கூடாது என்று தடைவிதித்து, தடையைக் கடுமையாக அமுல் படுத்தியும் வருகிறது" என்றும் கூறியிருக்கிறார்.

இதுபோன்று குஜராத் பாணியில் சட்டம் போட்டால் மீனவர்களின் ஓட்டுப் போய்விடுமே! அட, இந்த மாதிரிச் சட்டம்தான் போட முடியாது; சும்மா எடுத்ததற்கெல்லாம் இலங்கை அரசைச் சாடுவதையும், இலங்கையுடன் மோத மறுக்கிற மத்திய அரசைக் குறை கூறுவதையுமாவது தமிழக அரசியல்வாதிகள் தவிர்க்கலாம்.

*-நன்றி: துக்ளக்*

# கூட்டமைப்புக்குள் ஒரு குடுமிச் சண்டை!





தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் முதலமைச்சர் வேட்பாளருக்காக ஒரு குடுமிச் சண்டை நடைபெறுகின்றது. சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் இடையில் தான் சண்டை நடைபெறுவதாகக் கேள்வி. வித்தியாதரனும் இதற்காக முயற்சித்திருந்தார். ஆனால் கூட்டமைப்புத் தலைமையின் அருட்பார்வை பெரியளவிற்கு கிடைக்கவில்லை. இதனால் நன்றாகவே மனமுடைந்து போயிருக்கின்றார். முன்னாள் கல்விப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா, முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் போன்றோரும் முயற்சிப்பதாகத் தகவல்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நேரடியாகப் போட்டியிடுவதில் இரண்டு நெருக்கடிகள் உண்டு. வட-கிழக்கு இணைப்பினைக் கொள்கையாகக் கொண்டுள்ள கட்சிகள் வடக்குத் தேர்தலில் போட்டியிடுவது சரிதானா? என்பது முதலாவது விடயம். எந்தவித அதிகாரமும் இல்லாத மாகாண சபை முறையை ஏற்பது இரண்டாவது விடயம்.

வடக்கு மாகாண சபையில் போட்டியிடுகின்ற போது வட-கிழக்குப் பிரிப்பினைக் கூட்டமைப்பு ஏற்றதாக அமைந்துவிடும். அதேபோல் எந்த அதிகாரமுமில்லாத மாகாணசபை முறையை ஏற்கின்ற போது, அதுவே அரசியல் தீர்வாகவும் அமைந்துவிடும். எனவே கூட்டமைப்பு போட்டியிடாமல் அரசாங்கத் தரப்பு வெற்றி பெறுவதைத் தவிர்ப்பதற்கு கல்விமான்களை உள்ளடக்கிய பொதுவான ஒரு சுயேட்சைக் குழுவினை போட்டிக்கு நிறுத்துவது நல்லது என தமிழ் மக்களில் ஒரு சாரார் கருதுகின்றனர். பொதுப் பட்டியலில் வேட்பாளர்களை நிறுத்தினால் தமது கட்சி ஆதரவு தரும் என கஜேந்திர குமார் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறியுள்ளது.

ஆனால் கூட்டமைப்பு இந்தக் கருத்துக்களுக்கெல்லாம் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. சந்திக்கு வந்துள்ள அதன் உள் முரண்பாடுகள் வேறு. அதைத் தீர்ப்பதற்கு வழி ஏதும் காணப்படவில்லை.

கொள்கைகளைக் கைவிட்டு கூட்ட மைப்பு செயற்பட்டால் பிரக்ஞை பூர்வமான தமிழத் தேசிய சக்திகள் வாக்களிப்பதிலிருந்து ஒதுங்க வும் கூடும். அரசாங்கமும் வாக்குகளைப் பிரிக்க வேறு சுயேட்சைக் குழுக்களை இறக்க இருப்பதாகவும் தகவல்கள். இப்போக்குகள் தமிழ் அரசியலை மேலும் சிக்கலாக்கும்

*- சி.அ.யோதிலிங்கம் கட்டுரையிலிருந்து...*

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

(5)

- டி.பி.எஸ்.ஜெயராஜ்

அந்தப் 19 பேரில் நான்குபேர் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்டனர். மற்றொருவர் நீதிமன்றக் கண்காணிப்புக்கு உள்ளாக வேண்டும் என்கிற நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டார். எனவே 14 பேர்களுக்கு எதிராக வழக்கு விசாரணைகள் தொடர்ந்தன.

இந்தப் 14 பேரும் ஒரு தடுப்புக்காவல் தடைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர். நான்கு அங்கத்தினர்களைக் கொண்ட ஒரு விசேட விசாரணை நீதிபதிகள் குழாமினால் ஆரம்பகட்ட குற்றங்கள் பதியப்பட்டு நிலுவையிலுள்ள மேலதிக விசாரணைகளுக்கு வேண்டி அவர்களை 120 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சிறை வைக்கப்பட்டவர்களில் பரீஸ் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் பரிதி அல்லது றீகன் என்றழைக்கப்படும் நடராஜா மதீந்திரனும் ஒருவர். மேலும் ஐரோப்பாவின். அரசியல் மற்றும் பிரசாரப் பிரிவின் தலைவர் மேத்தா என்றழைக்கப்படும் துரைசாமி அரவிந்தனும் கைது செய்யப்பட்டவர்களில் உள்ள மற்றொரு பிரபலமான எல்.ரீ.ரீ.ஈ தலைவராவார். இதேவேளை பரிதியிடம் பிரெஞ்சுக் கடவுச்சீட்டும் மேத்தாவிடம் இத்தாலியக் கடவுச்சீட்டும் இருந்தன.

மற்றவர்களில் எல்.ரீ.ரீ.ஈயின் பிரான்சுக்கான நிதிச் செயலர் சின்னஜெயன் அல்லது ஜெயன் என்றழைக்கப்படும் துரைசாமி ஜெயமூர்த்தி, மக்கள் கடை முகாமையாளர் செல்லக்கொழுந்து ரவிகுலன், பரிதியின் பிரத்தியேகச் செயலாளர் சின்னத்தம்பி சுதாகரன், மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக கணக்காளர் கந்தையா மோகனதாஸ், எல்.ரீ.ரீ.ஈயின் பிரான்சுக்கான விளையாட்டுத் துறை செயலாளர் வேந்தன், வணிகச் செயலாளர் மோகன், தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலாளரும் மற்றும் கோவில் அறங்காவலருமான தொங்கல் அல்லது பாலா மாஸ்டர் என்றழைக்கப்படும் வினாயகமூர்த்தி மற்றும் ரி.சீ.சீயின் அலுவலக நிர்வாகி மகேஷ் மற்றும் பரீசின் சுற்றுப்புறத்தில் ஒரு பண்ணை வீட்டின் உடமையாளரான பார்த்திபன் என்போர் அடங்குவர்.

இந்தப் பண்ணை வீடு தமிழர்களை சட்டவிரோதமாக அடைத்து வைத்து அவர்களை மிரட்டிப் பணம் பறிப்பதற்காககாப் பயன்படுத்தப்பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது. மகேஷ் எல்.ரீ.ரீ.ஈயின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல். பானுவின் சகோதரர் என்று சொல்லப்படும் அதேவேளை மோகன் சிலவருடங்களுக்கு முன்பு லா சப்பலில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் ஈழமுரசுப் பத்திரிகையின் ஆசிரியர் கஜனது உடன்பிறப்பு என்றும் சொல்லப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களின் வீடுகள், அலுவலகங்கள்,வியாபார நிறுவனங்கள், வாகனங்கள் மற்றும் அவர்களுக்குச் சொந்தமான சகல அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களிலும் சோதனை நடத்தும் அதிகாரத்தை காவல் துறையினருக்கு நீதிமன்றம் வழங்கியது. தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் பிரான்சிலுள்ள தமிழர்களிடத்து எல்.ரீ.ரீ.ஈக்கு நிதி சேகரித்ததாக சந்தேகத்துக்கு உள்ளாகியிருந்தார்கள். எல்.ரீ.ரீ.ஈயின் மீது ஐரோப்பிய ஒன்றியம் தடை விதித்துள்ளதால், 2006 மே யிலிருந்து பிரான்சில் எல்.ரீ.ரீ.ஈ ஒரு தடைசெய்யப்பட்ட இயகக மாக மாறியிருந்தது. எனவே அதற்காக நிதி சேகரிப்பது ஒரு குற்றமாகும். இப்படியான ஒரு நிலையில் மிரட்டிப் பணம் பறித்தல், உடல் வன்முறைகளை ஏற்படுத்துதல், சட்டவிரோத வரையறைகளைப் பயன்படுத்துதல் போன்றவை அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளின் தன்மையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்குவதாக இருந்தன.

பிரான்சில் எல்.ரீ.ரீ.ஈயின் நடவடிக்கைகள் பற்றிய ஆரம்பகட்ட விசாரணை ஜூலை 2006 இல், ஐரோப்பிய ஒன்றியம் மே 27,2006 இல் அதனை தடை செய்த பின்பு ஆரம்பமானது. 2006 ஓகஸ்ட் மாதத்தில் விசாரணைக் குழுவொன்று முறைப்படி நியமிக்கப் படடது. பயங்கரவாத எதிர்ப்பு துணை இயக்குனரகம் (எஸ்.டி.ஏ.ரி), பிரெஞ்சு உள்துறை அமைச்சகத்தின் கீழுள்ள விசேட பயங்கரவாத எதிர்ப்பு இயக்குனரகம் என்பனவற்றின் கட்டளைகளின் படியும் அவர்களின் மேற்பார்வையின் கீழும் காவல்துறையினர் மற்றும் நீதி அமைச்சின் வழக்கறிஞர்கள் ஆகிய இரு பகுதியினரும் விசாரணைகளில் தொடர்புகளை மேற்கொண்டிருந்தனர்.

2006 நவம்பரில் இதில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. பரிதியால் வழி நடத்தப்படும் எல்.ரீ.ரீ.ஈயினர் பரீசின் புறநகர்ப் பகுதியிலுள்ள ஒரு பண்ணையில் கப்பம் பெறும் நோக்கத்தில் தமிழர்களை பலவந்தமாக அடைத்து வைத்து வருகிறார்கள். அவர்களில் சிலர் அடித்து சித்திரவதைப் படுத்தப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

பின்விளைவுகளுக்கு அஞ்சி, காவல்துறையினர் மீதுள்ள நம்பிக்கைக் குறைவினால் மற்றும் தமிழர் பிரச்சினை தவறான வழியில் திசைதிரும்பி விடலாம் என்கிற விசுவாசம் போன்ற பல்வேறு காரணங்கள் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்கள் காவல்துறையினரிடத்தில் முறைப்பாடு செய்வதை அலட்சியம் செய்து வந்தனர். ஆனால் மோசமாக அடித்து வதைக்கப்பட்ட ஒரு தமிழர், தனக்கு இந்தக் காயங்கள் எப்படி ஏற்பட்டன என்பதைத் தனது உடற் சிகிச்சை வைத்தியரிடம் வெளிப்படுத்தியபோது ஆபத்தான அந்தக குமிழ்கள் வெடித்துச் சிதறலாயிற்று. அந்த உடற் சிகிச்சை வைத்தியர் காவல்துறையினரிடம் எச்சரிக்கை விடுத்தபோது இந்தப் பிரச்சினைக்குள் எஸ்.டி.ஏ.ரி விரைவாகத் தலையை நுழைத்தது. அதன் அதிகாரிகள் பாதிக்கப்பட்டவரையும் மற்றும் வேறு இரண்டு சக பாதிப்பாளர்களையும் கண்டுபிடித்து அவர்களை ஒருவாறு இணங்க வைத்து நவம்பர் 2006ல் ஒரு இரகசிய முறைப்பாட்டைப் பதிவு செய்தனர்.

*தொடரும்....*

# வருமானத்திற்கு அதிகமான சொத்து
# தி.மு.க.அமைச்சர்களுக்கு நெருக்கடி



(சென்னை)

தி.மு.க., முன்னாள் அமைச்சர் துரைமுருகனுக்குச் சொந்தமான, சென்னை, வேலூரில் உள்ள வீடு, கல்வி நிறுவனங்கள் மற்றும் உறவினர்கள் வீடுகளில், லஞ்ச ஒழிப்புத் துறையினர், நேற்றுமுன்தினம் அதிரடியாக நுழைந்து,சோதனை நடத்தி, ஆவணங்களை அள்ளிச் சென்றனர்.

வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்குகள் தொடர்பாக, தி.மு.க., முன்னாள் அமைசசர்கள் நேரு, பொன்முடி, சுரேஷ்ராஜன், அன்பரசன் வீடுகளில், லஞ்ச ஒழிப்புத்துறை பொலிஸார் சோதனை நடத்தி, பல்வேறு ஆவணங்களை கைப்பற்றியிருந்தனர். இந்நிலையில், நேற்று பொதுப் பணி, சட்டத்துறை முன்னாள் அமைச்சர் துரைமுருகன் வீட்டில் சோதனை நடத்தினர். முன்னதாக, நம்பத்தகுந்த தகவல்கள் அடிப்படையில், துரைமுருகன் மீது, வருமானத்திற்கு அதிகமாக சொத்து குவித்தது தொடர்பாக, இலஞ்ச ஒழிப்பு பொலிசார் விசாரணை மேற்கொண்டனர். அதில், 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம், 31 ஆம் திகதி முதல், 2009 ஆம் ஆண்டு, மார்ச் மாதம், 31 ஆம் திகதி வரையிலான காலத்தில், வருமானத்திற்கு அதிகமாக சொத்துக் குவித்தது தொடர்பாக, நேற்று முன்தினம், 23 ஆம் திகதி, வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, நேற்று சென்னை, வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள துரைமுருகன், அவரது சகோதரர்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களில், சோதனை நடந்தது.

"இது பழி வாங்கும் நடவடிக்கை" என, தி.மு.க.,வினர் கூறி வருகின்றனர். ஆனால், நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் துரைமுருகன், காட்பாடி தொகுதியில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார். அப்போது, வேட்பு மனுவுடன் துரைமுருகன் தாக்கல் செய்த சொத்து பட்டியலில் மிகக்குறைந்தளவு சொத்துக்களே குறிப்பிட்டிருந்தார்.

துரைமுருகன் வீடு உள்ளிட்ட இடங்களில், லஞ்ச ஒழிப்பு பொலிஸார் சோதனை நடத்த, 10 முறை நேரம் குறித்த போதும், தகவல், கசிந்ததால் கைவிடப்பட்டதாகவும் நேற்றுமுன்தினம் நடந்த சோதனை, 11 ஆவது முயற்சி எனத் தெரியவருகின்றது.

# ஊழல் குற்றச்சாட்டு விசாரணை மன உளைச்சலில் தற்கொலை முயற்சி

(சென்னை)

இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் விசாரணை நடத்தியதால் மனம் உடைந்த அதிகாரி தமிழ்நாடு தேர்வாணைய அலுவலக அறையிலேயே தற்கொலைக்கு முயற்சி செய்தார். அவரை ஊழியர்கள் பேச்சுவார்த்தை நடத்தி காப்பாற்றியதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவர் சதிஷ் குமார். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். அவரிடம் அதிகாரியிடம் ஊழல் தொடர்பாக லஞ்ச ஒழிப்பு பொலிஸார் விசாரணை நடத்தினார்களாம். இதனால் மனம் உடைந்த அவர், தற்கொலை செய்துகொள்ள தேர்வாணைய அலுவலகத்தில் உள்ள ஆவணங்கள் வைக்கும் அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார். அலுவலக ஊழியர்கள், கதவைத் தட்டியபோதும் திறக்கவில்லை. இதையடுத்து ஊழியர்கள், அவரிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேசினர். சுமார் 3 மணி நேரம் அறையினுள் இருந்த அவரிடம் ஊழியர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வெளியே வரவழைத்தனர். இந்த நிலையில், ஆயிரம்விளக்கு இன்ஸ்பெக்டர் குணவர்மன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்.

# மத்திய அமைச்சருக்கு பொதுமகன் அடி

(புதுடில்லி)

டில்லியில் நடந்த பொது நிகழ்ச்சி ஒன்றில், மத்திய அமைச்சர் சரத் பவாரை கன்னத்தில் அறைந்தார் சீக்கிய வாலிபர். ஊழல் அரசியல்வாதிகளுக்கு இனி இது தான் கதி என, ஆவேசத்துடன் குரல் எழுப்பி, கத்தியை காட்டியும் மிரட்டினார். டில்லி ரோகினி பகுதியைச் சேர்ந்த ஹர்வீந்தர் சிங், டெம்போ டிரைவரே தாக்குதல் நடத்திய இளைஞர் ஆவார்.

மத்திய விவசாய அமைச்சரும், தேசியவாத காங்கிரஸ் தலைவருமான சரத் பவார், டில்லி நாடாளுமன்ற வீதியில் உள்ள ஒரு கேட்போர் கூடத்தில் நடந்த இலக்கிய நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் பங்கேற்றார். நிகழ்ச்சி முடிந்த பின், அங்கு கூடியிருந்த பத்திரிகையாளருக்கு பேட்டி அளித்தார். அப்போது, பொலிஸார் யாரும் இல்லை. தனியார் பாதுகாப்பு முகவர் சிலர் மட்டுமே பாதுகாப்பில் ஈடுபட்டிருந்தனர். நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு சரத் பவார், அரங்கை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார். அப்போது, பத்திரிகையாளர் மத்தியில் இருந்து



பவாரின் அருகில் வாலிபர், அவரது கன்னத்தில் ஓங்கி அறைந்தார். அத்துடன், ஊழல்வாதிகளுக்கு இனி இது தான் கதி. பணவீக்கமும், விலைவாசியும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன.

அதை கட்டுப்படுத்துவதற்கு சரத் பவார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பவாரும் ஊழல் அரசியல்வாதி தான் என, கடும் கூச்சல் எழுப்பினார். அந்த இளைஞர் மறைத்து வைத்திருந்த சிறிய கத்தியை எடுத்துக் காட்டி கடுமையான குரலில் மிரட்டல் விடுத்தார்.

கடந்த வாரம் முன்னாள் மத்திய அமைச்சர் சுக்ராமுக்கு ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டது. அப்போது கோர்ட்டுக்கு வெளியில் காத்து நின்று அவரையும் இவர் தாக்கியுள்ளார் என்பத குறிப்பிடத்தக்கது.

# புதிதாக 10 அனுமின் நிலையம்

(டில்லி)

இந்தியா முழுவதும் அடுத்த 5 ஆண்டுகளில் 10 புதிய அணுமின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று கூடங்குளம் விவகாரம் குறித்த பேச்சு எழுந்தது. அப்போது கூங்குளம் அணுமின் நிலையத்திற்கு எதிராக நடந்து வரும் போராட்டம் குறித்து உறுப்பினர்கள் விளக்கம் கேட்டனர்.

அதற்குப் பதில் அளித்த மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியதாவது, தற்போது இந்தியாவில் 19 அணுமின் நிலையங்கள் செயற்பட்டு வருகிறது. அவற்றின் மூலம் நாட்டிற்கு 4,650 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. கூடங்குளம் உள்பட 7 இடங்களில் அணுமின் நிலைய கட்டுமானப் பணிகள் நடந்து வருதிறது. அந்த பணிகள் முடிந்தவுடன் அந்த 7 அணுமின் நிலையங்களில் 5,300 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

12ஆவது ஐந்தாண்டு திட்ட காலமான 2012-17ஆம் ஆண்டுகளில் மேலும் 10 புதிய அணுமின் நிலையங்கள் அமைக்கப்படும். இந்தத் திட்ட காலத்திற்கு முன்பாக அணுமின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் இல்லை என்றார். கூடங்குளம் அணுமின் நிலையத்தை மூடக்கோரி மக்கள் நடத்தும் போராட்டம் இன்று 100ஆவது நாளைத் தொட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வறுமையால் இறக்கவில்லை

(புதுடில்லி)

கடந்த இரண்டு ஆண்டுகளில், நாட்டின் எந்தப் பகுதியிலும், வறுமையால் யாரும் சாகவில்லை என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

ராஜ்யசபாவில், இது குறித்து மத்திய திட்டத் துறை அமைச்சர் அஷ்வனி குமார் கூறுகையில், நாட்டில் வறுமையை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கில் ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் உள்ளிட்ட திட்டங்களை, மத்திய அரசு கொண்டு வந்துள்ளது.

அதுமட்டுமல்லாது, மானிய விலையில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு, குறைந்த விலையில் உணவுப் பொருட்கள் வினியோகிக்கப்படுகின்றன. இதனால், கடந்த இரண்டு ஆண்டுகளில், எந்த ஒரு மாநிலத்திலும், பசி மற்றும் பட்டினியால் யாரும் சாகவில்லை என உணவுத் துறை தெரிவிக்கிறது என்றார்.

இதேவேளை, கடந்தாண்டில் விவசாயிகள், 16 ஆயிரம் பேர் தற்கொலை செய்து கொண்டனர். கடந்த, 15 ஆண்டுகளில், 250 இலட்சம் பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். டி.ஏ.பி. உரத்தில் கலப்படம் செய்யப்படுகிறது என பத்திரிகை ஒன்றிக்கு பா.ம.க. நிறுவநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி மேற்குவங்கத்தில் சுட்டுக்கொலை?



(கொல்கத்தா)

மாவோயிஸ்ட் தலைவர் கிஷன்ஜி மேற்கு வங்கத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. ஜார்கிராம் அருகே உள்ள குஷபானி வனப்பகுதியில் நடந்த சண்டையின்போது கிஷன்ஜி சுட்டுக்கொல்லப்பட்டதாக தகவல்கள் கூறுகின்றன. சண்டைக்குப் பின்னர் அந்தப் பகுதியைப் பாதுகாப்புப் படையினர் தேடுதல் செய்தபோது கிஷன்ஜியின் உடலையும், அவருக்கு அருகே ஒரு ஏ.கே. 47 துப்பாக்கி இருந்ததையும் பாதுகாப்புப் படையினர் மீட்டுள்ளனர். இந்த சண்டையில் கிஷன்ஜி தவிர மேலும் 3 மாவோயிஸ்ட்களும் கொல்லப்பட்டனர்.

இந்தச் சண்டையின்போது கிஷன்யின் நெருங்கிய உதவியாளரான சுசித்ரா மகதோவும் இருந்ததாக கூறப்படுகிறது. அவர் அதே பகுதியில்தான் பதுங்கியிருப்பதாக கூறப்படுகிறது. இதையடுத்து சுசித்ராவை பாதுகாப்புப படையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

ஆனால் கிஷன்ஜி சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து மேற்கு வங்க மாநில அரசுத் தரப்பில் இதுவரை உறுதிப் படுத்தப்படவில்லை. 2 ஆண்டுகளுக்கு முன்பும் கூட கிஷன்ஜி கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. ஆனால் அது தவறு என்பது பின்னர் தெரிய வந்தது.

# சிங்கப்பூரில் நேருவிற்கு சிலை



இந்தியா மற்றும் சிங்கப்பூர் இடையேயான உறவு மேம்பட பாடுபட்ட முன்னாள் பிரதமர் நேருவுக்கு சிங்கப்பூர் அரசு சிலை வைத்துள்ளது. அந்தச் சிலையை பிரதமர் மன்மோகன் சிங் திறந்துவைத்தார்.

சிங்கப்பூரின் தேசிய பாரம்பரிய வாரியம் முன்னாள் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு சிலை வைத்துள்ளது. இந்தச் சிலை நதிக்கரையோரம் உள்ள ஏசியன் சிவிலைசேஷன் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதை சிங்கப்பூரில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட பிரதமர் மன்மோகன் சிங் திறந்து வைத்தார். இந்தச் சிலையை இந்திய சிற்பி பிமன் பிஹாரி தாஸ் செதுக்கியுள்ளார்.

நேரு 1937ஆம் ஆண்டு மே மாதம தான் முதன் முதலாக சிங்கப்பூர் சென்றார். அடுத்து 1946ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலும், 1950ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலும் சென்றுள்ளார.

## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்




வளமுடன்

வாழ

வாழ்த்துகின்றோம்

### வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................

முகவரி : ..................................

பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் ..................................

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


உலகச் செய்திகள்

# எகிப்து முன்னாள் பிரதமர் மீண்டும் பிரதமராக நியமனம்



எகிப்தின் இராணுவ ஆட்சியாளர்கள் முன்னாள் பிரதமர் கமல் கன்சூரியே மீண்டும் புதிய பிரதமராக நியமித்துள்ளனர். இராணுவ ஆட்சிக்கு எதிராக தொடர்சியாக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து, ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள், இராணுவ ஆட்சிக்கு கண்டனம் வெளியிட்டனர். இந்த நிலையில், எகிப்தில் புதிய அரசாங்கம் ஒன்றை நிறுவும் பொருட்டு, இந்தப் பிரதமர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# தென்கொரியாவுக்கு வடகொரியா எச்சரிக்கை



வடகொரியாக் கடல் எல்லைக்குள் உட்பட்ட பகுதியில் ஒரு குண்டு வெடித்தால் கூட தென் கொரியா ஜனாதிபதி மாளிகையை தரை மட்டமாக்கி விடுவோம் என வட கொரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்தாண்டு நவம்பரில் யெயோன்பியோங் என்ற தீவில் வட கொரியாவைச் சேர்ந்த கடற்படையினர் நடத்திய தாக்குதலில் இரண்டு தென் கொரியா கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதுடன் இரண்டு கட்டுமானத் தொழிலாளர்கள் இறந்தனர். இத்தாக்குதல் சம்பவத்தின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி தென் கொரிய கடற்படையினர், யெயான்பியோங் தீவுப் பகுதியில் கடந்த புதன்கிழமை போர்ப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இப்பயிற்சியின் போது வட கொரிய கடல் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் தென் கொரியா இராணுவத்தினரின் ஒரு குண்டாவது வந்து விழுமானால் அதை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம். இதற்கு பதிலடியாக தென் கொரியாவில் உள்ள ஜனாதிபதி மாளிகையை தரை மட்டமாக்குவோம். கடல் நெருப்பு என்ற பெயரில் எங்களின் தாக்குதல் மிகவும் தீவிரமாக இருக்கும் என வட கொரியா மக்கள் இராணுவத்தின் தலைமை தளபதி எச்சரிக்கை விடுத்தார்.

# வெளிநாட்டு உளவாளிகள் ஈரானில் கைது




அமெரிக்க சி.ஐ.ஏ. மற்றும் இஸ்ரேலிய மொஸாட் உளவாளிகள் எனக் கருதப்படும் 12 பேர் ஈரானில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சி.ஐ.ஏ. (அமெரிக்க மத்திய புலனாய்வு அமைப்பு) மற்றும் இஸ்ரேலின் மொஸாட் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இவர்கள் அனைவரும் ஈரானின் அணு ஆயுத நடவடிக்கைகளை புலனாய்வு செய்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா , இஸ்ரேல் ஆகியன ஈரானுக்கெதிராக உளவாளிகளை அனுப்பி பல்வேறு சதித்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக ஈரான் நாட்டு புலனாய்வுப் பிரிவினரின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளரர்.

ஈரானிய அதிகாரிகளின் துரித நடவடிக்கைகளின் மூலமே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டுள்ளார். இதற்கு முன்னரும் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் உளவாளிகள் பலர் ஈரானில் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் பலர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஐ.நா. பாதுகாப்பு சபை செயற்பாட்டில் மாற்றம் தேவை என்கிறது இந்தியா

(நியூஜோர்க்)

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை செயற்பாடுகள் இன்றைய யதார்த்த நிலையை பிரதிபலிக்கும் அளவில் இல்லை. அதில் மாற்றம் தேவை என இந்தியா தெரிவித்துள்ளது.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு எதிரான சவால்கள் என்ற தொனிப்பொருளில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் ஹர்தீப் சிங் பூரி. உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான மோதல்களைத் தவிர்ப்பது, உலக அமைதி மற்றும் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்களில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் செயற்பாடுகள் இன்றைய யதார்த்த நிலையை பிரதிபலிக்கும் வகையில் இல்லை. உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு எதிரான அச்சுறுத்தல்கள் குறித்து கவனமாக ஆராய்ந்து அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதுதான் ஐ.நா. பாதுகாப்பு சபையின் முக்கிய பணியாகும். 1945ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள், ஐ.நா. உறுப்பு நாடுகளின் இன்றைய சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இல்லை. உறுப்பு நாடுகளின் உத்தரவுகளை அமுல்படுத்த நிர்பந்தப்படுத்தும் முறை கடந்த காலத்துக்குரியதாக இருக்கட்டும். பரஸ்பர ஒத்துழைப்புடன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முறையே இன்றையத் தேவை எனத் தெரிவித்தார்.

# கடத்தல்காரர்கள் மோதல்

(மெக்ஸிகோ)

மெக்ஸிகோவில் போதைப்பொருள் கடத்தல் கோஷ்டியினருக்கிடையே நடந்த மோதல்களில் 17 பேர் கொல்லப்பட்டனர். அந்தோனிய ரோஸல்ஸ பகுதியில் கடந்த புதன்கிழமை 12 சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்ட 3 பொலிஸாரின் உடல்களும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். மற்றொரு இடத்தில் கைப்பற்றப்பட்ட வாகனத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட 4 பேரின் உடல்கள் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுவரை 17 உடல்கள் எரிந்த நிலையில் கைப்பற்றப்பட்டதாகவும், போதைப்பொருள் கடத்தல் கோஷ்டியினரால் கொல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.


# அவுஸ்திரியாவில் செயற்கைப் பனி



சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் புவி வெப்ப நிலை உயர்வு காரணமாக அவுஸ்திரிய மலைப்பகுதிகளில் பனிக்காலம் தாமதமாகிறது. இதனால் இயந்திரங்கள் வைத்து செயறகையாக பனி உருவாக்கும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.வெப்பநிலை அதிகரித்திருப்பதால் இன்னும் பனிக்காலம் தொடங்கவில்லை. மலையில் பனிச்சறுக்கு விளையாட்டுகள் நடக்கும் இடமமுழுக்க ஆங்காங்கே இயந்திரங்கள் வைத்து பனி உருவாக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வெப்பம் அதிகம் இருப்பதால் செயற்கை பனி உருகி விடுகிறது. இதனால் பனிச்சறுக்கு போட்டிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

# மெய்தான் பாருங்கோ...

## கொள்கையும்,கோவணமும்



எங்கட ஊரில நடக்கிற சம்பவங்கள் சிலதை நினைக்க மனசுக்குக் கஷ்டமாயிருக்குது பாருங்கோ. நாங்கள் இன்னமும் திருந்தாத நிலையில, எங்களை யாராவது நாயா நடத்துறவனைப் பாத்து எதிர்க்கேள்வி கேட்க எங்களுக்கு எந்த வித தகுதியுமில்லைக் கண்டியளே!

மன்னாரிலையும், மணலாற்றிலையும் இருந்து ஆமி வெளிக்கிடுகிறான்... எண்டவுடனை, வீட்டுக்கை கிடந்ததுகளை அள்ளிக்கட்டிக்கொண்டு, தெருத்தெருவா... வீடு வீடா... இருந்து எழும்பினதில எங்கட சேகரிப்பு எல்லாம் தேய்மானமாய் போய், கடைசியில முள்ளிவாய்க்காலோடை முட்டி மோதேக்கை எங்களிட்டை எஞ்சி நிண்டது கோவணம் ஒன்டுதான். இது பலபேருக்கு தெரிஞ்சும் தெரியாமலும் இருக்கிற சங்கதி.

ஆனாலும், பாருங்கோ கோவணக்கட்டோடை கூனிக் குறுகி நிண்டாலும், நாங்கள் கொள்கை குலையாத மனிசர்... எண்டதை இப்பவும் நிரூபிச்சுக் கொண்டு வாறம். பற்றற்ற வாழ்வின் அடையாளம் தான் கோவணம் அதாவது முற்றும் துறந்த முனிவன் நிலை. நாட்டுப்பற்று வீட்டுப்பற்று... இனப்பற்று.. எதிரியை இளக்காரமாய் பாத்த பற்று.. எண்டு எத்தனையோ பற்றுக்களைத் துறந்து... காவி, கமண்டலமில்லாத பட்டை, கொட்டையில்லாத கோவணத் தோற்றத்தோடைதான் முள்ளிவாய்க்கால் தொங்கல்ல குளறின படி... நிண்டனாங்கள்.

போர் மூலம் இந்தக் கோவணம் கற்றுத்தந்த பாடமெல்லாம் இன்டைக்கு எங்கை போச்சுது?

பாடம் கற்றவர்கள் அந்தப் படிப்பினையின் படியல்லோ நடக்கவேணும்.

ஆனா, இப்ப என்ன நடக்குது இஞ்சை?

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பகுதிக்கை வந்து பாத்தால் கொஞ்சம் விளங்கும். வலிகாம இடப்பெயர்வு மக்களை வன்னிமண் வரவேற்று அடைக்கலம் கொடுத்தது எண்டும் ஆனையை அடக்கிய அரியாத்தை வாழ்ந்த மண்எண்டும் மார்தட்டி நிண்ட ஒரு போராட்டக்காலம் இருக்குது கண்டியளே!

போராட்ட உணர்ச்சி 'பிறசர்' ஏறினமாதி நிற்கேக்கை ஒவ்வொருவருடைய முகங்களும் அதற்குப் பின்னால கிடந்த அகங்களும் அவ்வளவாப் புலப்படேல்லைப் பாருங்கோ.

இப்ப புலியள் போனாப்பிறகுதான் இஞ்சத்தே ஆக்களின்ர இன, மானம் எப்படிப்பட்டதெண்டு தெரியவருகுது தனக்குத் தனக்கெண்டால் சுளகு வேகமாப் புடைக்கிறது. போல.. தனக்குத் தனக்கான பொருள் பண்டங்களை ஓசியில தேட வெளிக்கிட்டிருக்கினம்.

வன்னிப் போருக்கை பாதிக்கப்பட்ட தமிழன் இண்டைக்கு அதே போருக்கை அம்பிட்ட இன்னொரு தமிழனை எப்படிப் பார்க்கிறான்...?என்ன மாதிரி நோக்குகிறான்..? எண்டதை இப்ப மீள் குடியேற்றம் செய்த இடத்தில வந்து பாத்தால் விளங்கும்.

கொஞ்சம் கூட கை கூசாத நிலையாகி, ஒருத்தன் இன்னொருவனுடைய பொருளை அம்பாளிக்க நினைக்கேக்கை... அட! அவனும் நம்மைப் போல ஒருத்தன் தானே! அதோடை என்ர இனத்தவன்தானே... எண்ட சிந்தனையில இருந்து விலகி, இனமாவது...? சனமாவது...?கொள்கையாவது...? கோவணமாவது...? எண்டு நினைக்கிறவன் தமிழனா...?

சொந்த ஊரவன் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் இப்பவும் செட்டிகுளம் அகதி முகாமில சீரழிஞ்சு சீவியம் நடத்திக்கொண்டிருக்கிற விசயம் தெரியாதே இவையளுக்கு?

நாங்கள் எப்பொழுதும் அடுத்தவனைப் பற்றிக் கவலைப்படாமல் வாழுற ஆட்கள், அதுதான் காலம் நமக்கு 'அகதி' முத்திரை குத்தி அழகு பாத்துக்கொண்டு நிக்குது.

ஊரோடு ஒத்து ஓடிப்போய் ஒரு இடமாய் அகதியாய் இருந்திட்டு, பிறகு ஊருக்கு முந்தி வந்து குடியேறுகிறவன், குடியேற்றப்படாத இடத்துக்குள்ள போய், இன்னொருவனுடைய பொருள் பண்டங்களைக் களவாடிக் கொண்டு வந்து விற்று காசு சம்பாதிக்கிறதை எந்த வகையில சேர்க்கலாம்?

சிங்களவன் அடிக்கேக்கைதான் நாங்கள் கொள்கையளவில் ஒன்றுபடுகிறம்... உணர்ச்சி வசப்படுகிறம்.... மற்றும் படி...?

- சின்னக்குட்டி சின்னச்சாமி

# புலிகள் தோற்கடிக்கப்பட்டது எவ்வாறு?

**– நோர்வே அறிக்கையின் தரவு ஆவணத்திலிருந்து...**

பயங்கரவாத ஒழிப்பு எனும் நிலைப் பாட்டிலிருந்து புலிகளைப் பொறுத்து, அமெரிக்காவும், இந்தியாவும் 'கெட்ட பொலிஸ்காரர்கள்' எனும் அளவிலும் ஐரோப்பிய யூனியன், நோர்வே போன் றன 'நல்ல பொலிஸ்காரர்கள்' எனும் அளவிலும்தான் செயறபட்டார்கள் என் கிறது நோர்வே அரசுக்காகக் கல்வித் துறை ஆய்வாளர்களால் தயாரிக்கப் பட்ட அறிக்கை. ஒருபுறம் மகிந்த ராஜ பக்ஷவின் அரசு புலிகளின் மீதான முழுமையான தாக்குதலுக்கான முஸ்தீபு களில் ஈடுபட்டிருந்த பொழுது, மறு புறம் ஐரோப்பிய யூனியனும் அதனை யொட்டிய பிறநாடுகளும் புலிகளைத் தடை செய்ததானது அவர்களிடையே ஒரு குழப்பத்தையும், திகைப்பையும் உருவாக்கியது.

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தக் கொள்கையிலிருந்து அமெரிக்கா, ஐரோப் பிய யூனியன், இந்தியா என்பன இந் தப் பிரச்சினையைப் பார்த்தபோது, நோர்வேயின் செயற்பாடுகள் சில வேளை பயங்கரவாதிகளுக்கு ஆதர வானதாகப் பார்க்கப்பட்ட நிலைமை யில், நோர்வே மத்தியஸ்தம் செய்வது என்பது மிகவும் சிக்கலுக்கு உள்ளா னது.

புலிகளின் மீதான முனைப்பான தாக் குதலை மேற்கொள்ள இலங்கை அர சைத் தூண்டிய நிகழ்வுகள், நிலை மைகள் என்ன என்பது குறித்தும் அறிக்கை சில விடயங்களை முன் வைக்கிறது. இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ வைத் தவிர, இந்தியா அமெரிக்கா ஐரோப்பிய யூனியன் என எந்த நாடும் புலிகளை இராணுவ ரீதியில் தோற் கடிக்கப்பட முடியும் எனக் கருதவில்லை.

இலங்கை அரசு புலிகளை யுத்தத் தில் தோற்கடிக்க முடியும் எனும் நிலைப்பாட்டுக்கு வந்ததற்கான மிக முக்கியமான காரணங்களில் ஒன்றாக புலிகள் இயக்கத்திலிருந்தான கருணா வின் பிளவை அறிக்கை சுட்டிக்காட் டுகிறது. கருணாவின் பிளவுக்கான காரணமாக, வசதிபடைத்த யாழ்ப்பா ணக் குடும்பங்களைச் சேர்ந்தவர் கள் வெளிநாட்டுக்குப் போக, அதிக அளவி லான கிழக்கு மாகாணத்தவர் புலி களில் தொகையாகச் சேர்த்துக்கொள் ளப்பட்ட நிலைமை இருந்தது என்ப தனை அறிக்கை குறிப்பிடுகிறது. கரு ணாவின் பிளவினால் புலிகளின் போராளி களின் தொகை கணிசமாகக் குறைந் தது. அதனோடு புலிகளின் மிகப் பெரிய பின்னடைவாக, புலிகளின் வரலாற்றில் மிகப்பெரும் உளவுத்துறைக் கசிவாக அந்தப் பிளவு அமைந்தது என்கிறது அறிக்கை.

இந்த உளவுத்துறைக் கசிவினோடு பின்னாளில் தமிழ் மக்கள் புலிகள் உறுப்பினர்கள் இலங்கை இராணுவத்தின ருடன் இணைந்து புலிகளை அழிப் பதில் பங்காற்றினார்கள் என்பதனை யும் அறிக்கை குறிப்பிடுகிறது.

2004 ஆம் ஆண்டு சந்திரிகா குமா ரணதுங்கவின் காலத்தில் இந்தப் பிளவு ஏற்பட்டபோது, சந்திரிகா குமாரண துங்க கருணாவைச் சந்திக்க மறுத்து விட்டார். இலங்கையின் ஜனாதிபதி யின் முடிவையும் மறுதளித்து விட்டு இலங்கை இராணுவம் கருணாவை விசா ரணை செய்ததுடன், அவரை இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து செயற்படவும் இலங்கை இராணுவம் முயற்சியை எடுத தது. அரசியல்வாதிகளின் முடிவை மறுத்துவிட்டு இலங்கை இராணுவம் சுயாதீனமாக முடிவெடுத்த இந்த நிகழ்வு இலங்கை வரலாற்றில் முக்கியமானது என அறிக்கை குறிப்பிடுகிறது.

கருணாவின் படையணி பின்னாளில் கிழக்கில் தோற்கடிக்கப்பட்டாலும், கருணாவின் பிளவு என்பது இலங்கை இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடை யிலான இராணுவச் சமநிலையை இலங்கை இராணுவத்திற்கு ஏதுவான தாக மாற்றியமைத்தது எனத் திட்ட வட்டமாக அறிக்கை குறிப்பிடுகிறது.

கருணாவின் பிளவு எந்த அளவு முக்கியமான பாத்திரத்தை இலங்கை இராணுவத்தில் நிலைப்பாட்டில் தோற்று வித்ததோ அதே அளவு முக்கியத்துவத் தினை கதிர்காமர், நீலன்திருச்செல்வம் போன்றவர்கள் கொல்லப்பட்ட நிகழ்வு களும் அமெரிக்க மேற்கத்திய அரசு களின் மீது ஏற்படுத்தியது. மேற்கத் திய அமெரிக்க ராஜாங்க மட்டத்தி லான தமது ஏகப்பிரதிநித்துவ உறவு களை ஏற்படுத்திக் கொள்வதற்கான மிகப்பெரும் தடைகளாக, இந்த மட் டங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த கதிர்காமரையும் நீலன் திருச்செல் வத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பு பார்த்தது. அவர்கள் கொல்லப்பட்ட தானது நடைமுறையில் அமெரிக்க, மேற்கத்திய ராஜதந்திர மட்டத்திலிருந்து புலிகளை இன்னும் தூரப்படுத்தவே உதவியது.

மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான ஜனாதிபதித் தேர்தலில் புலிகள் இலங் கைத் தேர்தலைப் புறக்கணிக்குமாறு கேட்டுக்கொண்டதானது, மிகக்குறைந்த வாக்கு வித்தியாசத்தில், அதாவது வெறும் இரண்டு சதவீத வாக்கு வித் தியாசத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. இந்தத் தேர்தலானது இலங்கையின் வரலாற் றில் முக்கியமான ஒரு செய்தியையும் உடன் விளைவாகக் கொண்டிருந்தது.

இதுவரைக்கும் இலங்கையின் ஆட் சியாளர்களின் பதவிகளைத் தீர்மானிப் பதாக இருந்த அல்லது கிங் மேக்கர் களாக இருந்த, தமிழர் மற்றும் முஸ்லீம் கள் எனும் சிறுபான்மையின மக்களின வாக்குகள் இல்லாமலேயே பெரும் பான்மை சிங்கள சமூகத்தின் வாக்கு களிலேயே ஜனாதிபதி பதிவியை அடைய முடியும் என்பதனை இது மகிந்த ராஜ பக்ஷவுக்குக் காண்பித்தது என்கிறது அறிக்கை. ஆங்கிலவலமாக்கப்பட்ட, கொழும்பை மையமாகக் கொண்ட வர்க்கத்திலிருந்து வராத, பிரேமதாச வின் கொள்கைகளின் சாயலையொத்த, கறைபடாத தூய கிராமியம், பாது காப்பு, சிங்கள மரபுக் கலாசாரத்தின் பாதுகாப்பு என்பவற்றை முன்னிறுத் திய, அனைத்துச் சிங்கள மக்களின தும் தலைவனாக மகிந்த சிந்தனை யோடு ராஜபக்ஷ அரியணை ஏறினார் என்கிறது அறிக்கை.

கருணாவின் பிளவினால் ஏற்பட்ட இராணுவச் சமநிலைக்குலைவு, சிங்களப பெரும்பான்மை வாக்குகளே ஆட்சிய திகாரம் பெறப் போதும் எனும் நடை முறைச் செய்தி, இவற்றினுடன் அமெ ரிக்க மேற்கத்திய அரசுகள் பேசிவந்த பயங்கரவாத எதிர்ப்புக்கொள்கை களான மனிதாபிமான யுத்தம், மக்க ளைப் பாதுகாப்பதற்கான யுத்தம் எனும் கோஷங்களையும் மகிந்த ராஜ பக்ஷ சுவீகரித்துக் கொர்ண்டார். இலங் கையின் குறிப்பிட்ட இனப்பிரச்சினை எனும் அம்சம் தள்ளப்பட்டு, முழுமை யாகப் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பதனை இலங்கை அரசு சாதுரியமாக முன்வைத்தது.

ராஜீவ்காந்தியின் படுகொலையை அடுத்து தனது ராஜதந்திர நகர்வுகளை இந்தியா அல்லாத மேற்கத்திய ராஜ தந்திர நகர்வுகளின் மூலம் முன்னெடுக்க நினைத்த புலிகளின் அரசியல் நகர்வு கள் இப்போது மிகப்பெரும் சிக்கலை எதிர்கொண்டது. புலிகளின் மீதான இராணுவத்தீர்வு எனும் நிலைப் பாட் டுக்கு வந்தவுடன் செக்கோஸ்லாவாக் கியா, இஸ்ரேல், சீனா போன்ற நாடு களிலிருந்து ராஜபக்ஷ கடனுக்கு ஆயு தங்களை வாங்கிக் குவித்தார். வியட் நாம், பர்மா, ஜோர்டான், ஜப்பான், ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளிடமி ருந்து பொருளாதார உதவிகளைப் பெற்றுக் கொண்டார். இந்தியா, அமெ ரிக்கா போன்ற நாடுகள் செய்மதியி னூடாக உளவு பார்த்துச் சொல்லின. இந்தியா தமிழகத்தில் ஏற்படக் கூடிய பதட்டத்தைக் கவனம் கொண்டு, இரட்டை நிலைப்பாட்டைக் கைக்கொண்டது. ஒரு பக்கம் யுத்தத்தில் தமிழ் மக்களது பாதுகாப்புப் பற்றிப் பேசிய இந்தியா, மறுபுறம் புலிகளை அழிக்க வேண் டும் என்பதில் உறுதியாக இருந்தது. சீனாவுடன் ஒப்பிட, தமிழகப் பதட் டத்தை நினைவில் கொண்டு, இந்தியா நேரடியிலான கனரக ஆயுத உதவி களைச் செய்யவில்லை என்றாலும், பிற நாடுகளிடமிருந்து இலங்கை இராணுவத் தளபாடங்களை வாங்கிக் குவிப்பதற்கு அதிகாரபூர்வமற்ற ஒப்பு தலை வழங்கியிருந்தது.

இந்தச் சூழ்நிலையில் 2009 பெப்ர வரி மாதம் நோர்வேயின் மத்தியஸ் தத்தை மகிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டுவந்தார். யுத்தம் தவிர்க்க முடி யாதது எனும் நிலை வந்தவுடன் வெகு மக்களைப் பாதுகாப்பது, அழிவுக ளைக் குறைப்பது, அதற்காகச் செயற படுவது எனும் நிலைப்பாட்டுக்கு வந்து நோர்வே, இந்தியா, அமெரிக்கா, ஐரோப் பிய நாடுகளுடன் சேர்ந்து செயலில் இறங்கியது.

இலங்கை அரசு இச்சூழலில் மூன் வகையிலான விவாதத்தை முன்வைத் தது. முதலாவதாக, மனிதாபிமான யுத தம், மக்களைப் பாதுகாக்கும் யுத்தம் எனும் பயங்கரவாத ஒழிப்புக் கொள் கையை அது முன்வைத்தது. ஈராக்கி லும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்க, மேற்கத்திய அரசுகளின் நடைமுறையை ஒப்பிட்டு, மனித உரிமை மீறலை முன் வைத்துத் தம் மீது அழுத்தம் கொடுப் பதிலுள்ள அமெரிக்க, மேற்கத்தியத் தகைமையை அது கேள்விக்கு உட்படுத தியது. இரண்டாவதாக, இறையாண் மையையும், உள்நாட்டுத் தீர்வையும் அது முதன்மைப்படுத்தியது. மூன்றாவதாக பிராந்திய வல்லரசுக ளான சீனாவினதும், இந்தியாவினதும் ஆதரவினை அது தன் பக்கம் வென் றெடுத்திருந்தது எனச் சுட்டிக் காட்டு கிறது அறிக்கை.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்குமான யுத்தம் கடு மையாக நடந்து கொண்டிருந்த வேளை யில், புலிகள் ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, நோர்வே மற்றும் ஜப் பான் போன்ற நாடுகளுக்கு ஒரு கடி தத்தினை அனுப்பியது. யுத்தநிறுத் தத்தை வேண்டிய அக்கடிதம் மாறாக எந்தவிதமான உத்தரவாதங்களையும் தனது தரப்பிலிருந்து வழங்கவில்லை. இலங்கை அரசு அதனை நிராகரித் தது. உலக அரசுகள் புலிகள் ஆயுதங களைக் கீழே வைக்க வேண்டும் என வும் திட்டமிட்ட வகையில் யுத்தத்தை நிறுத்துவதான பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் எனவும் சொன்னது. ஒரு வகையிலான சரணடைவு என்ப தன் கீழ் நோர்வேயும், அமெரிக்காவும் இதற்கான திட்டவரைவில் இறங்கின.

(6ஆம் பக்கம் பார்க்க)



மே 9 ஆம் திகதி புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தொடர்பு கொள்ளும் இந்திய உள்துறையமைச்சர் ப.சிதம் பரம் முன்கூட்டியே தயாரிக்கப்பட்ட ஒரு வரைவின் அடிப்படை யில் ஆயுதங்களைக் கீழே வைக்க புலிகள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதனைச் சொல்கிறார். அன்றைய நிலையில் தேர்தலில் பிஜேபி வெல்லும் எனவும், இலங்கை அரசை போர் நிறுத்தத்திற்கு பிஜேபி வலியுறுத்தும் எனவும், ஆகவே சிதம் பரத்தின் திட்டம் ஒரு காங்கிரஸ் தந்திரம் எனவும், அதனை நிரா கரிக்குமாறும் பிரபாகரனிடம் சொல்கிறார் மறுமலர்ச்சி திரா விட முன்னேற்றக் கழகத்தின் தலைவரான வை.கோபாலசாமி.

> கருணாவின் பிளவு எந்த அளவு முக்கியமான பாத்திரத்தை இலங்கை இராணுவத்தில் நிலைப்பாட்டில் தோற்றுவித்ததோ அதே அளவு முக்கியத்துவத்தினை கதிர்காமர், நீலன்திருச் செல்வம் போன்றவர்கள் கொல்லப்பட்ட நிகழ்வுகளும் அமெரிக்க மேற்கத்திய அரசுகளின் மீது ஏற்படுத்தியது. மேற்கத்திய அமெரிக்க ராஜாங்க மட்டத்திலான தமது ஏகப்பிரதிநித்துவ உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான மிகப்பெரும் தடை களாக, இந்த மட்டங்களில் செல்வாக்குப் பெற்றிருந்த கதிர் காமரையும், நீலன் திருச்செல்வத்தையும் விடுதலைப்புலிகள் அமைப்பு பார்த்தது.

# ஆறாயிரம் குடும்பங்கள் வீடுதிரும்ப தவம் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளைப் பிரதேச செயலர் பிரிவில் 5500 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டிருப்பதாகவும் மேலும் 6000 குடும்பங்கள் மீள் குடியமர்வுக்காகப் பதிவுசெய்திருப்பதாகவும் அவ்வாறான குடும்பங்களுக்கு வீட்டு வசதி மின்சார வசதி போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதே இன்றைய அத்தியாவசிய பிரச்சினையாக இருப்பதாகவும் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலர்பிரிவில் ஏற்கனவே 5500 குடும்பங்கள் மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, கீரிமலை, தெல்லிப்பளை, இளவாலை, வீத்தகபுரம் போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். இப்பகுதிகளில் பெரும்பாலான பொது மக்களது வீடுகள் யுத்தம் காரணமாக முற்றாக அழிவுக்குள்ளாகியிருப்பதன் காரணமாக 1500 குடும்பங்கள் மட்டுமே அங்கு நிரந்தரமாகக் குடியேறியிருப்பதாகவும் ஏனைய 2000 வரையிலானோர் தங்களது காணிகளைத் துபரவு செய்துவிட்டு அங்கிருந்து தமது முன்னைய இடங்களுக்குத் திரும்பிவிட்டதாகவும், ஏனைய குடும்பங்கள் அவ்வாறு உறவினர், நணபர்கள் வீடுகளிலேயே தங்கியிருபபதாகவும தெல்லிப்பளைப் பிரதேச செயலர குறிப்பிட்டார். இப்பகுதிகளில் வைத்தியசாலை, பாடசாலை, குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிடடார்.

## தமிழ் மக்களின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தடையாக இருந்து வருகின்றனர். இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக்காண அவர்கள் மனந்திருந்தி முன்வர வேண்டும். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் எமது மக்களின் பிரதிநிதிகளாகவே இந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றோம். எனவே பிரச்சி னைகளைத் தீர்க்கக்கூடிய வாய்ப்புக்களும் ஆற்றலும் எமக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இந்நாட்டில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்துகின்ற 31 அரசியல் கட்சிகள் பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவுக்குழுவொன்றை அமைப்பது தொடர்பிலான யோசனை நாடாளுமன்ற சபாநாயகரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதில் அரச தரப்பைச் சேர்ந்த 17 கட்சிகளும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 14 கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. இக் குழுவின் ஆய்வறிக்கையை எதிர்வரும் ஆறுமாத காலத்திற்குள் பெற்றுக் கொண்டு அதனை ஆராய்ந்து அதன் மூலம் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும்.

அத்துடன் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு ஓர் ஆரம்பமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக செயற்படுத்தி பின்னர் அதற்கு மேலதிக அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் உரிய இலக்கை அடைய முடியும். அதுவே சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வாக அமையும். நான் யாழ்ப்பாணத்திற்கு மட்டுமல்லாமல் இந்நாட்டில் அனைத்துப் பகுதிகளுக்கும் சார்பான அமைச்சராகவே செயற்பட்டு வருகின்றேன்.

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலியன் சிலை புனரமைப்பு தொடர்பில் யாழ்ப்பாணத் திலிருந்து வெளிவரும் சில தமிழ் ஊடகங்கள் சங்கிலியன் சிலையை அகற்றி விட்டு புத்தரின் சிலையை அங்கு வைக்கப் போவதாகப் பொய்ப் பிரச் சாரங்களை மேற்கொண்டு மக்களை குழப்பிவந்தனர். ஆனால் அதேயிடத்தில் சங்கிலியன் சிலை தற்போது கம்பீரமான முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களினது தலை மையிலான அரசின் மூலமே தமிழ் மக்களின் அரசி யல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரமான ஒரு தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தான் நம்புவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜெப்றி வோன் ஓர்டன் அவர்களுக்கு உறுதிபடத் தெரிவித்தார்.

அமைச்சர் அவர்களது கருத்துக்களை உன்னிப்பாக செவிமடுத்த மேற்படி நாடாளுமன்ற உறுப்பினர் இவ்விடயங்கள் தொடர்பில் தான் அவதானம் செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலின்போது அமைச்சரின் ஆலோசகர் திருமதி வி.ஜெகராசசிங்கம் உடனிருந்தார்.

## சோதிட ஆலோசனைப்படி...

டிசம்பர் 23 ஆம் திகதி அமைச்சரவையை மாற்றியமைப்பது குறித்து ஆலோசிக்குமாறு சோதிடர்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த அமைச்சரவை மாற்றத்தின்போது சமல் ராஜபக்ஷ பிரதமராகவும், நிமால் சிறிபால டி சில்வா சபாநாயகராகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பதவியில் இருந்து பசில் ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அவருக்கு அனைத்துலக உறவுகளில் தொடர்புபட்ட அமைச்சு ஒன்று வழங்கப்படவுள்ளது.

மகிந்தானந்த அளுத்கமகே இளைஞர் விவகார அமைச்சராகவும், அவரது பிரதி அமைச்சராக நாமல் ராஜபக்ஷவும் நியமிக்கப்படவுள்ளனர்.

டலஸ் அழகப்பெரும ஊடகத்துறை அமைச்சராகவும், பொருளாதார விவகாரங்களை கவனிக்கும் மூத்த அமைச்சராக கலாநிதி சரத் அமுனுகம நியமிக்கப்படவுள்ளதாகவும், எல்லா அமைச்சர்களினது துறைகளும் முற்றாக மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும் அந்த இணையத் தளம் தகவல் வெளியிட்டுள்ளது.

## குடாநாட்டில்...

மழை நீர் தாழ் நிலங்களுக்குள் புகுந்து பொதுமக்களது இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கின்றன. இதன்போது அப்பகுதிகளில் இருந்து பொது மக்கள் எவரும் இடம்பெயர்ந்ததாகத் தமக்கு பிரதேச செயலர்கள் எவரிடம் இருந்தும் நேற்று மாலை வரை முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இருந்தும் குறித்த பகுதிகளுக்குத் தாம் நேரில் விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டதாகவும், குறிப்பிட்ட அவர், எதிர்வரும் நாட்களில் வட பகுதியில் மிதமான காற்றுடன் கனமழை பெய்யக்கூடிய காலநிலை நிலவும் எனவும் வானிலை அவதான நிலையத்தை மேற்கோள்காட்டி அவர் தெரிவித்தார்.

தற்போது யாழ். மாவட்டத்தில் நீடிக்கும் காலநிலை தொடரும் பட்சத்தில் தாழ்வு நிலங்களில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படும் சூழ்நிலையும் நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை தொடர் மழை காரணமாக நகரின் பல பகுதிகளில் மழை நீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நிற்கின்றது. யாழ். மாநகர சபையினர் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர். யாழ். நெடுங்குளம், கோவில் வீதி, இந்துக் கல்லூரி வீதி, வண்ணார்பண்ணை மெதடிஸ் திருச்சபைக்கு அருகாமையில் செல்லும் வாய்க்கால் ஆகிய இடங்களில் மக்களின் வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்து அவர்கள் குடியிருக்க முடியாதநிலை ஏற்பட்டிருந்தது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா அவ்விடங்களுக்கு நேரடியாகச் சென்று வீடுகளுக்கு முன் தேங்கி நிற்கும் நீரை பக்கோ இயந்திரம் மூலம் கடலுக்குள் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மராமரத்துப் பகுதியினருக்கு பணிப்புரை வழங்கியதைத் தொடர்ந்து அவ்விதம் தேங்கி நிற்கும் நீரை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் குடாநாட்டின் தீவகப் பகுதிகளில் உள்ள இடங்களில் அடைமழை காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவுப் பகுதியில் மேற்கு, கிழக்கூர், மந்தா ஆகிய பகுதிகளில் பெய்த அடைமழையினால் குடிசை வீடுகள் வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுவதாகப் பிரதேச சபைத் தலைவர் க.றெக்சியன் (றஜிவ்) தெரிவித்தார்.

இம் மக்களுக்கான தேவைகளைத் தற்போது நிவர்த்தி செய்ய உதவி அரசாங்க அதிபர், கிராம சேவகர்கள், பிரதேச சபை உறுப்பினர்களுடன் இணைந்து நிவர்த்திசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள உள்ள அதேவேளை நிவாரணப் பணிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேலும், ஊர்காவற்றுறை சின்னமடுப் பகுதியில் வெள்ள நீர் தேங்கியுள்ளதால் பிரதேச வீதிப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன், மக்கள் பலர் இடம்பெயர்ந்து உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக அப்பிரதேச சபைத் தலைவர் ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அனலைதீவு, பிரதான வீதியில் அமைந்துள்ள மதகு உடைந்துள்ளமையால் அதை மீண்டும் புனரமைப்பதற்காகப் பிரதேச சபைத் தலைவர், வீதி அபிவிருத்தி அதிகாரசபையை தொடர்பு கொண்டு தற்காலிக பாதையை நிர்மாணிக்க நடவடிக்கை எடுத்துள்ளார். (85,பா)

## இரணைமடுக் குளத்தின்...

வெள்ளப்பாதிப்பு விபரங்கள் உத்தியோகபூர்வமாகத் தமக்கு பிரதேச செயலகங்களி லிருந்து கிடைக்கவில்லை என மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சுகுணதாஸ் தெரிவித்துள்ளார். (29,45)

| குளங்கள் | கொள்ளளவு | நீர் மட்டம் |
|---|---|---|
| இரணைமடுக்குளம் | 34அடி | 28அடி 10அங். |
| அக்கராயன்குளம் | 23அடி | 19அடி 06அங |
| கல்மடுக்குளம் | 24அடி | 19அடி 01அங் |
| புதுமுறிப்புக்குளம் | 16அடி 06அங் | 12அடி 03அங் |
| கனகாம்பிகைக்குளம் | 10அடி | 10அடி 06அங் |
| கரியாலைநாகபடுவான் | 10அடி | 06அடி 08அங் |
| பிரமந்தனாறுகுளம் | 12அடி | 12அடி 03அங் |
| வன்னேரிக்குளம் | 09அடி 05அங | 09அடி 11அங் |

## சித்திர வதைகளுக்கு...

செயற்பட வேண்டுமென சர்வதேச நீதியாளர்கள் குழு வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக சாட்சிகளை பாதுகாத்தல், சித்திரவதைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு புகலிடம் வழங்குதல் போன்றவற்றில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டுமென சர்வதேச நீதியாளர்கள் குழு தெரிவித்துள்ளது.

## பொன்சேகாவை...

சந்திக்கத் திட்டமிட்டிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் அவர் தனது மனதை மாற்றிக்கொண்டு வேறொரு பிரதிநிதியை சந்திக்க வைத்துள்ளார். அவரே அமைச்சருக்கு கடுமையான அழுத்தங்களை கொடுத்துள்ளார்.

## புகலிடம் கோரி ...

புகலிடக் கோரிக்கையாளர்கள் அகதிகள் மீள்பார்வை மன்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும் முன்னர் விமானம் மூலம் வருகின்ற புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு மட்டுமே இந்த வசதி வழங்கப்பட்டது.

அதேவேளை, அவுஸ்ரேலியாவிற்குள் படகு மூலம் பிரவேசித்து புகலிடம் கோரிய 27 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவுஸ்ரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் போவுன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்களே இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இவர்களுக்கு தொழில புரிதல், மருத்துவ நலனகளை பெற்றுக்கொள்ளல் போன்ற வசதிகள் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


விசா பிரிட்ஜிங் என்னும் புகலிடக் கோரிக்கையாளர்களுக் கான விசா நடைமுறையின் கீழ் குறித்த நபர்களுக்கு அச்சலுகை அளிக்கப் பட்டுள்ளது.

மாதாந்தம் குறைந்தபட்சம் 100 புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு இவ்வாறு விசா வழங்க அவுஸ்ரேலிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் படகுப் பயணிகளுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பில் பல்வேறு சிக்கல் மிகுந்த நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


செய்திப்பரணம்

**பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை ஸ்ரீலங்கா எதுபட்டும் இங்கதனை எடுத்துவர - முதுசமதை முழுதுமாய்ப் பாவித்தும் முடியாதுகை நழுவியாசிக்கே பழுதுறவாம் கிடைத்தது பீடு!**



# பல்கலைக்கழகங்களில் பொலிஸார் மாணவர்களே தீர்மானிக்க வேண்டும்

## உயர்கல்வி அமைச்சின் செயலாளர்



(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் பொலிஸ் காவலரண்களை அமைப்பதா? இல்லையா? என்பதை மாணவர்களே தீர்மானிக்க வேண்டும் என உயர்கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் நவரத்ன தெரிவித்துள்ளார்.

ஒரு சிறு மாணவர் குழுவினரால் பல்கலைக்கழகங்களில் குழப்பங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. இதனால் ஏனைய மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன. இதற்கு இடமளிக்க முடியாது. எனவே, பல்கலைக்கழகங்களில் குழப்பங்களை ஏற்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்வதா? அல்லது சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்துவதா? என்ற தீர்மானத்திலேயே பொலிஸ் காவலரண்கள் அமைப்பது தொடர்பிலான கேள்விக்குத் தீர்வு காண முடியும்.

நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டம், ஒழுங்கு பல்கலைக்கழகங்களிலும் கடைபிடிக்கப்பட வேண்டும். அதனை மீற முடியாது. பல்கலைக்கழகம் தனியொரு உலகமல்ல. அதுவும் நாட்டுடன் தொடர்புபட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இம்பெற்றது. கோண்டாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மகேந்திரன் பிரதீபன் (வயது-29) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஏற்கனவே நஞ்சருந்தி சிகிச்சை பெற்று வந்த நிலையில் மீளவும் இவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எப்.எஸ்)

## இயற்கை அனர்த்தங்களின் போது நிவாரணப் பணிகளில் படையினர்

வெள்ள நிலைமை, காற்று, மண்சரிவு உட்பட எந்தவொரு இயற்கை அனர்த்ததின் போதும் நிவாரண நடவடிக்கைகளுக்காக பாதுகாப்புத் தரப்புகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு அனர்த்த முகாமைத்துவ தேசிய சபைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் ஏழாவது கூட்டம், அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற போதே ஜனாதிபதி இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலவுகின்ற சீரற்ற வானிலை காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு அனர்த்த நிலையையும் எதிர்கொள்ளத் தேவையான திட்டங்களை வகுக்குமாறும் இதன்போது ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையினால் அறிமுகப்படுத்தப்படவுள்ள தேடுதல் மற்றும் மீட்புக்கான பிரிவை உடனடியாக ஸ்தாபிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

# பாகிஸ்தான் யுத்தக் கப்பல் இலங்கைக்கு நல்லெண்ண விஜயம்



(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான சைப் (SAIF) என்னும் யுத்தக் கப்பல் இலங்கைக்கான நல்லெண்ண விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளது. பாகிஸ்தான் கடற்படையின் முன்னணி பாதுகாப்பு அரணாக பயன்படும் குறித்த கப்பல் இன்று இலங்கைக்கு வருகைதரவுள்ளது. இக் கப்பலானது எதிர்வரும் 29ஆம் திகதி வரை இலங்கையில் தரித்திருக்கும் என பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருநாட்டு கடற்படை வீரர்களும் தங்களது அனுபவங்களை பகிர்ந்துகொள்வதுடன் யுத்த தந்திரங்கள் பற்றியும் கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சீனாவின் தயாரிப்பில் உருவாகிய சைப் கப்பலை கடந்தவருடம் பாகிஸ்தான் கடற்படை கொள்வனவு செய்திருந்தது. இக்கப்பலில் பல்வேறுபட்ட நவீன யுத்த உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கான நல்லெண்ண விஜயத்தினை முடித்துக்கொண்டு "சைப்" யுத்தக்கப்பல் மாலைதீவுக்கும் மலேசியாவுக்கும் விஜ யம் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 67 மாணவர்களுக்கு கூவைகட்டு; ஆரம்பப் பிரிவு மூடப்பட்டது

(மத்துகம)

மத்துகம கல்வி வலயத்திற்குட்பட்ட பகுதியிலுள்ள இரத்மலான கனிஷ்ட பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் 67 பேருக்கு கூவைக்கட்டு நோய் ஏற்பட்டுள்ளதன் காரணமாக அப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு நேற்று முதல் மூடப்பட்டுள்ளது.

இந்த நோய்த்தாக்கம் பரவுவதை கட்டுப்படுத்தும் முகமாக குறித்த பாடசாலையின் ஆரம்பப் பிரிவை உடனடியாக மூடுமாறு அப்பாடசாலைக்கு சென்ற வைத்தியர் பிரசாத் லியனகே அதிபருக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வலயப் பணிப்பாளரின் அனுமதியுடன் தரம் 1 இலிருந்து தரம் 5 வரையான வகுப்புகள் மூடப்பட்டுள்ளன.

## மக்களுக்கான நிவாரணங்களற்ற கனவுத் திட்டமாக அரசின் பட்ஜட்



(கொழும்பு)

2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் மக்களுக்கான நிவாரணங்கள் அற்ற கனவுத் திட்டமாக அமைந்துள்ளது என மக்கள விடுதலை முன்னணியின் பொதுச செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கும் நடவடிக்கையை கொழும்பு புறக்கோட்டையில் மக்கள் விடுதலை முன்னணி நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆரம்பித்துள்ளது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், 10,000 ரூபா சம்பள உயர்வை எதிர்பார்த்திருந்த அரசாங்க ஊழியர்களினதும், 4000 ரூபா சம்பள உயர்வினை எதிர்ப்பார்த்த தனியார் ஊழியர்களினதும் எதிர்பார்ப்புகளை 2012 இற்கான வருட வரவு-செலவு திடடம் பூர்த்தி செய்யவில்லை.

சாதாரண மக்கள், தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளினது எதிர்பார்ப்புகளையும் 2012 ஆம் வருடத்திற்கான வரவு-செலவு திட்டம் பூர்த்தி செய்யவில்லை.

இந்த மக்கள் மீண்டும் அரசாங்கத்திடம் ஏமார்ந்து அதன் பின்னால் போககூடாது என அவர் கேட்டுக்கொண்டார். இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்களான சுனில் ஹந்துன்ஹெட்டி, கே.டீ.லால் காந்த, விஜித ஹேரத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மிதிவெடியில் சிக்கி கால் பாதம் சிதைந்தது

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் பகுதியில் விறகு வெட்டச் சென்ற இளைஞர் மிதிவெடிக்குள் சிக்கி பாதம் இழந்துள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஜெகநாதன் (வயது-29) என்ற இளைஞரே கால் சிதைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

## நஞ்சருந்திய குடும்பஸ்தர் அவசர சிகிச்சைப் பிரிவில்

(யாழ்ப்பாணம்)

நஞ்சருந்திய நிலையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஞானபிரகாஸ் (வயது-35) என்பவரே நஞ்சருந்தியவராவார்.


## பதவி வெற்றிடம்

கணக்குப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கல்வித் தகைமை | : | க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கணக்கியலில் விசேட சித்தியுடன் வர்த்தகம் உட்பட 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். |
| வயதெல்லை | : | 25 - 50 வருடங்கள் |
| ஏனைய தகைமைகள் | : | ஆங்கில மொழியில் தேர்ச்சியுடையவராகவும், மேற்கூறப்பட்ட பதவிக்கான முன் அனுபவம் மற்றும் கணினி அறிவுடையவராகவும் இருத்தல் வேண்டும். |

தகுதியுடையோர் சுய விபரத்துடன் கூடிய விண்ணப்பங்களை 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

ஆளணி முகாமையாளர்
தினமுரசு காரியாலயம்,
இல: 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(இ)


## முள்ளிவாய்க்கால் கிழக்கு மக்கள் கோம்பாவிலில் குடியேற்றம்

(கோம்பாவில்)

வவுனியா, மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் வலயம் - 0, வலயம் - 2 ஆகியவற்றில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களில் தெரிவுசெய்யப்பட்ட 72 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் கோம்பாவில் பகுதியில் முதற்கட்டமாக நேற்றைய தினம் குடியேற்றப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்களே கோம்பாவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் நலன்புரி நிலையத்தில் குடியேற்றட்டுள்ளதாக அரசாங்க அதிபர் என்.வேதநாயகம் தெரிவித்தார்.

5 பஸ்களில் நேற்று முன்தினம அழைத்துவரப்பட்ட 72 குடும்பங்களைச் சேர்ந்த 229 உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கைவேலி கணேசா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டு பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கோம்பாவில் பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட இடைத்தங்கல் நலன்புரி நிலையத்தில் இவர்களுக்கான தங்குமிட வசதிகள், மலசலகூட வசதிகள் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கபட்டுள்ளன. இவர்களுக்கு 3 நாட்களுக்கு சமைத்த உணவு வழங்கப்படுவதுடன், உணவுப் பொதிகளும் வழங்கப்படும் என அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் முள்ளிவாய்க் கால் கிழக்கு கிராம அலுவுலர் பிரிவு உள்ளிட்ட சில பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களை கோமபாவில் இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



இதேவேளை, மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இடம்பெயர்ந்த நிலையில் தங்கியுள்ள புதுக்குடியிருப்பு மேற்கிலுள்ள முக்கோணப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி மீள்குடியேற்றப்படவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 நவம்பர் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.